தொகுதி 5, இதழ் 19

ஏப்ரல் 1-15, 2025

இலவச விநியோகத்திற்காக

# நியூ இந்தியா சமாச்சார்



# முத்ரா

## மக்கள்சக்தியை வலுப்படுத்துகிறது

முத்ரா திட்டமானது, இந்தியாவில் *10* ஆண்டுகளில் உள்ளடக்கிய, நிலையான மற்றும் மதிப்பீடு அடிப்படையிலான தொழில் முனைவோர் கலாச்சாரத்தை மேம்படுத்தியதன் மூலம் தொழில்முனைவோருக்கான தளங்களை மாற்றியுள்ளது.

# இந்தியா மிகப்பெரிய ஒரு கடல்சார் சக்தியாக உருவாகிறது

இந்தியா வளமான கடல்சார் வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்தியாவின் 95 சதவீதத்திற்கும் அதிக அளவிலும், 74 சதவீதத்திற்கும் அதிக மதிப்பிலுமான வர்த்தகம், கடல்வழியாகவே நடைபெறுகிறது. அதே நேரத்தில் 80 சதவீத கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு கடலில் இருந்தே கிடைக்கிறது. கடல்சார் வளத்தின் இந்த வலுவான அடித்தளத்தின் பின்னால், வீடு மற்றும் குடும்பத்தை விட்டு பிரிந்து, பல மாதங்களாக கடலில் தங்கி இந்தியாவின் உலகளாவிய வர்த்தகம் மற்றும் வர்த்தகத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் மக்கள் உள்ளனர். அது போன்ற மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், ஏப்ரல் 5ம் தேதியை தேசிய கடல்சார் தினமாக நாடு கொண்டாடுகிறது, ஏனெனில் 1919-ம் ஆண்டு இந்த நாளில், இந்தியாவின் முதல் வணிகக் கப்பலான எஸ்எஸ்லாயல்டி, மும்பையிலிருந்து லண்டனுக்கு புறப்பட்டது. சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவின் கடல் வழித்தடங்களில் ஆங்கிலேயர்கள் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்த நிலையில் இது ஒரு வரலாற்று சாதனையாகும். கடந்த 1964-ம் ஆண்டு முதல், நாடு இந்த நாளில் தேசிய கடல்சார் தினத்தைக் கொண்டாடி வருகிறது....



"வளமானதொரு கடல்சார் பாரம்பரியத்தை இந்தியா கொண்டிருப்பதால், நாம் பாக்கியம் படைத்தவர்களாக உள்ளோம். அதற்காக, நாம் மிகவும் பெருமைப்படுகிறோம். தேசிய கடல்சார் தினத்தன்று, கடல்சார் உலகில் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பங்களித்த அனைவரையும் நினைவுகூர்கிறோம், மேலும் துறைமுகம் சார்ந்த வளர்ச்சிக்கான நமது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

*- நரேந்திரமோடி, பிரதமர்*

# நியூ இந்தியா சமாச்சார்

தொகுதி 5, இதழ் 19, ஏப்ரல் 1–15, 2025



**EDITOR IN CHIEF**
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

**CHIEF CONSULTING EDITOR**
SANTOSH KUMAR

**CONSULTING EDITOR**
VIBHOR SHARMA

**SENIOR ASST. CONSULTING EDITOR**
PAWAN KUMAR

**ASST. CONSULTING EDITORS**
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

**LANGUAGE EDITORS**
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

**CHIEF DESIGNER**
SHYAM TIWARI

**SENIOR DESIGNER**
PHOOL CHAND TIWARI

**DESIGNERS**
ABHAY GUPTA
SATYAM SINGH





**CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES**
https://newindiasamachar.pib.gov.in/news.aspx
**TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK**
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

**Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'**

# உள்பக்கங்களில்...




அட்டைப்பக்கக் கட்டுரை
முத்ரா திட்டத்தின் ஒரு தசாப்தம்

## முத்ரா–மூலம் தொழில்முனைவின் அமிர்த நீர்வீழ்ச்சி


பத்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் இதுவரை 52 கோடிக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முத்ரா திட்டம் என்பது ஏற்கெனவே குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டவர்களின் தொழில்முனைவோர் திறமையின் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையின் கதையாகும். இந்த புரட்சிகரமான கடன் திட்டம், மக்களை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு பொருளாதார வளங்களை அளித்து, அவர்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலிமையாக்கி, வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான பாதையை முன்னெடுத்துள்ளது. | 14-27

பட்ஜெட் குறித்த இணையவழி கருத்தரங்கு

**வளர்ச்சியடைந்த பாரதத்தை கட்டமைப்பதற்கான பாதை**





திட்டங்களின் பலன்களை கடைக்கோடி மக்களுக்கும் வழங்குதல் | 10-13

**செய்திச்சுருக்கம்** | 4-5

**கூட்டுறவு துறையில் உலகளாவிய கூட்டாண்மைகள் மூலம் முன்னேற்றம் எட்டப்படும்**
கூட்டுறவுத் துறையின் ஆய்வுக் கூட்டத்தில் பிரதமர் மோடி ஒரு புதிய தாரக மந்திரத்தை வழங்கினார். | 28-29

**“தேவபூமி”யில் சீசன் இல்லாத நிலை இருக்கக் கூடாது**
உத்தராகண்டில் குளிர்கால சுற்றுலாவை ஊக்குவிக்க பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார். | 30-31

**மத்திய அமைச்சரவையின் முடிவுகள்**
கேதார்நாத்-ஹேம்குண்ட்சாஹிப் இடையே ரோப் வழித்தடத்தை அரசு அமைக்கும். | 32

**வளர்ச்சியை நோக்கி உறுதியான நடவடிக்கைகள்**
மகளிர் தினத்தில் லட்சாதிபதி சகோதரிகளுடன் பிரதமர் மோடியின் உரையாடல் | 33-35

**NXT மாநாடு: புத்தாக்கத்தின் பூமியாக இந்தியா மாறி வருகிறது**
விமானம் தாங்கிக் கப்பல்கள் முதல் குறைக்கடத்தி வரையிலான துறையில் வளர்ச்சிப் பாதைகள் உருவாக்கப்படுகின்றன. | 36-37

**மொரீஷியசில் வசிக்கும் மினி இந்தியா**
மொரீஷியஸ் நாட்டின் மிக உயர்ந்த குடிமகன் விருதைப் பெற்றார் பிரதமர் மோடி. | 38-39

**ஆளுமை: டாக்டர் பிந்தேஷ்வர் பாதக்**
“இந்தியாவின் கழிப்பறை மனிதர்”





சமூகப் பணியில் ஈடுஇணையற்ற பங்களிப்பு, ‘பத்மவிபூஷண்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (மரணத்திற்குப் பின்) | 40

சிறப்புச் செய்தி :மகளிருக்கு அதிகாரமளித்தல்

**இந்திய மகளிர் தங்களின் நிதி எதிர்காலத்தை உருவாக்குகிறார்கள்.**





சமூக மற்றும் பொருளாதார பங்கேற்பு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கான பெண்களின் அணுகுமுறையை அரசின் முயற்சிகள் மேம்படுத்தியுள்ளன, மேலும் சமூகத்தில் பெண்களுக்கான பங்களிப்பில் நேரடித் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது, சமூகத்தில் பெண்கள் இப்போது ஒரு உறுதியான நிலையில் வலுவாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். | 6-9



**Published & Printed By:** Yogesh Kumar Baweja, Director General, on behalf of Central Bureau Of Communication.
**Printed At:** Kaveri Print Process Pvt. Ltd. A-104, Sec-65, Noida-201301 U.P.
**Communication Address:** Room No–316, National Media Centre, Raisina Road, New Delhi-110001.
**e-mail:** response-nis@pib.gov.in, **RNI No.:** DELTAM/2020/78809

# ஆசிரியரின் மேசையிலிருந்து...

# முத்ரா: வளர்ச்சியடைந்த பாரதத்தின் தீர்மானங்களை எட்டுவதற்கான அடித்தளம்

*வாழ்த்துகள்,*

இந்தியா ஊக்கமும், விருப்பங்களும் நிறைந்த, இளையோரைக் கொண்ட நாடு. இன்று நாட்டில் திறமைக்குப் பஞ்சமில்லை. ஒவ்வொருவரும், அவர் எந்தத் துறையில் இருந்தாலும், எந்த பிரிவைச் சேர்ந்தவராக இருந்தாலும், சில சிறப்புத் திறமைகளைக் கொண்டுள்ளனர். தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கு அந்தத் திறமையை அங்கீகரிக்க வேண்டிய அவசியம் இருந்தது. முத்ரா திட்டம் ஒரு தசாப்த காலமாக மக்களின் இந்த திறமையை, குறிப்பாக இளைஞர்களின் திறமையை வலுப்படுத்தி வருகிறது. மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய மத்திய அரசின் ஒரு முயற்சியான முத்ரா திட்டம், தங்கள் சொந்த முயற்சிகளின் மூலம் வெற்றியடையத் தீர்மானித்துள்ள நாட்டின் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் வாய்ப்புகளை அளித்துள்ளது. இத் திட்டம் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், மக்களை வேலை வழங்குபவர்களாகவும் மாற்றியுள்ளது.

புதிய நிதியாண்டு ஏப்ரல் 1-ம்தேதி தொடங்கியுள்ளது, மேலும் இந்தியப் பொருளாதாரத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய 'முத்ரா'திட்டம் தொடங்கப்பட்டு ஒரு தசாப்தம் நிறைவடைவது ஒரு தற்செயல் நிகழ்வாகும். 2015-16-ம் ஆண்டு பொது பட்ஜெட்டில் முத்ரா திட்டம் அறிவிக்கப்பட்டது. அதே ஆண்டில் 2016 ஏப்ரல் 8—ம் தேதியன்று, பிரதமர் நரேந்திரமோடி அந்த திட்டத்தைத் தொடங்கி வைத்தார். கடந்த 10 ஆண்டுகளில், சிறிய அளவிலான நிதி நடவடிக்கைகளை தொடங்குவதற்கான ஒரு தளமாக முத்ரா திட்டம் மாறியுள்ளது. இந்தத் திட்டம் குறு நிறுவனங்களுக்கு எளிதாகவும், தொந்தரவு இல்லாமலும் கடன்கள் கிடைப்பதற்கு உதவியுள்ளது. மேலும், ஏராளமான இளம் தொழில்முனைவோர் தங்கள் தொழில்களைத் தொடங்க உதவியுள்ளது. 'முத்ரா' திட்டத்தை ஊக்குவிக்க மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் மற்றும் கொள்கைகளின் காரணமாக, லட்சக்கணக்கான குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், இப்போது முறையான பொருளாதாரத்தின் பங்களிப்பை வழங்குபவையாக மாறிவிட்டன, மேலும் இது அதிகளவு வட்டிவிகிதங்களை வசூலிக்கும் கந்துவட்டிக்காரர்களின் பிடியிலிருந்து விடுபட அந்த நிறுவனங்களுக்கு உதவியுள்ளது.

மேலும், முத்ரா திட்டம் அடித்தட்டு அளவில் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவியுள்ளது. முத்ரா திட்டம், உற்பத்தி, சேவை, சில்லறை விற்பனை மற்றும் அவற்றுடன் தொடர்புடைய செயல்பாடுகளில் வருவாய் மற்றும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நலனை உறுதி செய்கிறது. வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான தீர்மானங்களில் ஒரு முக்கிய அடித்தளமாக மாறியுள்ள முத்ரா திட்டம், இந்த முறை நமது இதழின் அட்டைப் பக்க கட்டுரையாக இடம் பெற்றுள்ளது.


இது தவிர, ஆளுமைகள் குறித்த தொடரில், சுகாதாரத் துறையில் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்கிய பத்மவிபூஷண் விருது பெற்ற டாக்டர் பிந்தேஷ்வர் பாதக்கின் பிறந்தநாளில் அவருக்கு அஞ்சலி செலுத்துதல், மத்திய அமைச்சரவை முடிவுகள் மற்றும் கடந்த பதினைந்து நாட்களில் பிரதமர் நரேந்திர மோடியின் நிகழ்ச்சிகளும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன.

அவற்றுடன், ஏப்ரல் 5-ம் தேதி கொண்டாடப்படும் தேசிய கடல்சார் தினம், இதழின் பின்பக்க அட்டையில் ஏப்ரல் 14-ம் தேதி கொண்டாடப்படும் பாபாசாகேப் பீமாராவ் அம்பேத்கரின் பிறந்தநாள் குறித்த சிறப்புக் கட்டுரை உள்ளிட்டவை இந்த இதழின் சிறப்புகளாகும்.

(திரேந்திர ஓஜா)

13 இந்திய மொழிகளில் நியூ இந்தியா சமாச்சார் இதழைப் படிக்க இணைப்பை கிளிக் செய்யவும்
https://newindiasamachar.pib.gov.in/news.aspx

# மின்னஞ்சல் பெட்டி




## நியூ இந்தியா சமாச்சார் இதழில் பல்வேறு துறைகளின் தகவல்கள் உள்ளன

நியூ இந்தியா சமாச்சார் இதழின் சமீபத்திய அனைத்து இதழ்களும் கண்கவர் அட்டைப்படம் மற்றும் வடிவமைப்புடன், ஒரு கருத்தை மையமாகக் கொண்ட வடிவத்துடன் வெளிவருகின்றன. இந்த இதழில் எந்தத் துறையும் விடுபடாமல் பார்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. போட்டித் தேர்வுகளுக்கு முயற்சிக்கும் அனைத்து மாணவர்களும் இந்த இதழை படிப்பதன் மூலம் நிச்சயமாக பயனடைவார்கள். படங்கள் பத்திரிகையின் இதழை நினைவில் கொள்வதை எளிதாக்குகின்றன.

**பி பிரேமா**
**prof.prema@gmail.com**

## நியூ இந்தியா சமாச்சார் இதழ் தற்போதைய நிகழ்வுகளை பேசுகிறது.

நியூ இந்தியா சமாச்சார் ஒரு சிறந்த இரு வார இதழ். இந்த இதழ் நாட்டில் நடக்கும் நடப்பு நிகழ்வுகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது. இந்த இதழைப் படிப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். வெளியீட்டாளர், ஆசிரியர் மற்றும் நியூ இந்தியா சமாச்சார் முழு குழுவிற்கு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் (டாக்டர்) முகேஷ் அகர்வால்**

## வளர்ச்சியடைந்த பாரதம் இயக்கம் பற்றிய தகவல்களை இந்த இதழ் வழங்குகிறது

நாட்டின் பிரதமராக மூன்றாவது முறையாக பதவியேற்றுள்ள நரேந்திர மோடி, 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை ஒரு வளர்ச்சியடைந்த பாரதமாக மாற்ற விரும்புகிறார். இந்த திசையில் நாட்டில் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. இந்த பணிகள் பற்றிய தகவல்களை நியூ இந்தியா சமாச்சார் இதழில் உள்ள பல்வேறு கட்டுரைகளிலிருந்து பெறுகிறோம். இந்த இதழ் அரசாங்கம் மற்றும் நாட்டின் வளர்ச்சி நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது.

**சுமந்த் குமார் சோம்**
**somsumanta2013@gmail.com**

## உடல் பருமனைக் குறைக்க பயனுள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

சமீபத்தில், பிரதமர் நரேந்திர மோடி தனது மாதாந்திர வானொலி நிகழ்ச்சியான மனதின் குரல் நிகழ்ச்சியில் உடல் பருமன் பற்றிப் பேசினார். இந்த விஷயத்தை நாம் மிகுந்த கவனத்தோடு எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த திசையில் பயனுள்ள மற்றும் அர்த்தமுள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**டிஎஸ் கார்த்திக்**
**vtra1636@gmail.com**


## பத்திரிகை மூலம் வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்து அறிந்திருங்கள்

சமீபத்தில், பிரதமர் நரேந்திர மோடி தனது மாதாந்திர வானொலி நிகழ்ச்சியான மனதின் குரல் நிகழ்ச்சியில் உடல் பருமன் பற்றிப் பேசினார். இந்த விஷயத்தை நாம் மிகுந்த கவனத்தோடு எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த திசையில் பயனுள்ள மற்றும் அர்த்தமுள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**ஜனார்த்தன் டெபாடா**
**janardandebata63@gmail.com**

செய்தி சுருக்கங்கள்

## சில்வாசாவில் உள்ள நமோ மருத்துவமனையின் தொடக்க விழா



தாத்ரா மற்றும் நகர் ஹவேலி நவீன அடையாளத்துடன் வேகமாக வளர்ந்து வருகிறது. மேலும் சில்வாசா அனைத்து தரப்பு மக்களையும் வரவேற்கும் நகரமாக வளர்ந்து வருகிறது. புதிய வாய்ப்புகளில் இப்பகுதி விரைவான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இதற்கு ஏற்றவாறு, பிரதமர் நரேந்திர மோடி சில்வாசாவில் உள்ள நமோ மருத்துவமனையை (கட்டம் I) திறந்து வைத்தார். 460 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் கட்டப்பட்ட 450 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனை, யூனியன் பிரதேசத்தில் சுகாதார சேவைகளை கணிசமாக வலுப்படுத்தும். இது பிராந்திய மக்களுக்கு, குறிப்பாக பழங்குடி சமூகங்களுக்கு அதிநவீன மருத்துவ சேவையை வழங்கும். தொடக்க நிகழ்ச்சியில், கடந்த ஆண்டுகளில் இப்பகுதியில் நவீன சுகாதார சேவைகள் கணிசமாக விரிவடைந்துள்ளதாக பிரதமர் மோடி கூறினார். சில்வாசாவில் 2580 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள யூனியன் பிரதேசத்திற்கான பல மேம்பாட்டுத் திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டினார்.

## UPI பரிவர்த்தனையில் அதிவேக வளர்ச்சி




கடந்த ஐந்து நிதியாண்டுகளில், ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) மூலம் டிஜிட்டல் பணம் செலுத்தும் பரிவர்த்தனைகளில் நிலையான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 2024-25 நிதியாண்டில், ஜனவரி 2025 வரை, 18,120 கோடிக்கும் அதிகமான பரிவர்த்தனைகள் டிஜிட்டல் முறையில் செய்யப்பட்டுள்ளன, இதன் மதிப்பு 2,330.72 லட்சம் கோடி ரூபாய் அதேசமயம் 2020-21 நிதியாண்டில், 4,370-க்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகள் டிஜிட்டல் முறையில் செய்யப்பட்டுள்ளன. டிஜிட்டல் பரிவர்த்தனை மோசடியைத் தடுக்க அரசாங்கம், இந்திய தேசிய பணப் பரிவர்த்தனை கழகம் மற்றும் ரிசர்வ் வங்கி ஆகியவற்றால் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளரின் கைபேசி எண் மற்றும் சாதனத்திற்கு இடையே சாதன பிணைப்பு, PIN மூலம் இரு-காரணி அங்கீகாரம், தினசரி பரிவர்த்தனை வரம்புகள், வரம்புகள் மற்றும் பயன்பாட்டின் மீதான கட்டுப்பாடுகள் போன்றவை இதில் அடங்கும். ஒரு தேசிய சைபர் குற்ற அறிக்கையிடல் வலைத்தளம், www.cybercrime.gov.in மற்றும் ஒரு தேசிய சைபர் குற்ற உதவி எண், "1930" ஆகியவையும் தொடங்கப்பட்டுள்ளன.

## 23,000 கி.மீ நீளமுள்ள ரயில் பாதையை மேம்படுத்தியுள்ள ரயில்வே



இந்தியா 23,000 கி.மீ நீளமுள்ள ரயில் பாதையை மணிக்கு 130 கி.மீ வேகத்தில் ரயில்களை இயக்க மேம்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை நமது ரயில்வேயை வேகமாகவும், பாதுகாப்பாகவும், திறமையாகவும் மாற்றும். இத்துடன், 54,337 கி.மீ நீளமுள்ள ரயில் பாதைகளும் மணிக்கு 110 கி.மீ வேகத்தில் ரயில்களை இயக்க ஏதுவாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இப்போது நாட்டில் ஐந்தில் ஒரு பங்கு ரயில் கட்டமைப்பு அதிவேகத்திற்கு முழுமையாக தயாராக உள்ளது. இந்திய ரயில்வேயின் முதன்மையான மித அதிவேக ரயில், வந்தே பாரத் எக்ஸ்பிரஸ், இந்த உள்கட்டமைப்பு மேம்பாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு.




## கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதாரம் 66% வளர்ச்சியடைந்துள்ளது

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், இந்தியாவின் பொருளாதாரம் புதிய உயரங்களைத் தொட்டு, *2015* மற்றும் *2025* க்கு இடையில் *66%* வளர்ச்சியடைந்து *3.8* டிரில்லியன் டாலர்களை எட்டியுள்ளது. இந்த சாதனை ஒரு வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான மற்றொரு வலுவான படியாகும். பிப்ரவரி மாதத்திலேயே, சர்வதேச நாணய நிதியம் *(IMF)* இந்தியாவின் பொருளாதாரத்தை மதிப்பிட்டுள்ளது. இதன்படி, கடந்த *10* ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதாரம் *66* சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிப்பது குறித்த பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழிக் கருத்தரங்கில், பிரதமர் மோடி, இந்த வளர்ச்சி பல பெரிய பொருளாதாரங்களின் வளர்ச்சியை விட அதிகம் என்று கூறினார். இந்தியா *5* டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

## யமுனா நதியில் கப்பல் சுற்றுலாவை ஊக்குவிக்க ஒப்பந்தம் கையெழுத்து



இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் (IWAI) தில்லி அரசின் சில துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி, சோனியா விஹார் மற்றும் ஜகத்பூர் இடையேயான யமுனா நதியின் நான்கு கிலோமீட்டர் நீர்வழிப்பாதையில் (தேசிய நீர்வழி 110) கப்பல் சுற்றுலா மேம்படுத்தப்படும். கப்பல் பயணம் தொடங்கப்பட்டவுடன், தில்லிவாசிகள் மற்றும் தலைநகருக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அதை அனுபவிக்க முடியும். மாசு இல்லாத நீர் போக்குவரத்தை உறுதி செய்வதற்காக மின்சார மற்றும் சூரிய ஆற்றல் மூலம் படகுகள் இயக்கப்படும். ஒவ்வொரு படகிலும் 20-30 பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் இருக்கும். இந்த படகுகளில் பயோ-கழிப்பறைகள், பொது அறிவிப்பு அமைப்பு மற்றும் பயணிகளின் பாதுகாப்பிற்காக உயிர்காக்கும் ஜாக்கெட்டுகள் போன்ற வசதிகள் இருக்கும்.

## கதர் கைவினைஞர்களின் ஊதியத்தில் 20% அதிகரிப்பு

கிராமப்புற கைவினைஞர்களின் ஊதியத்தை ஏப்ரல் 1, 2025 முதல் 20% அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. தற்போது, நூற்பாலைகளில் ஒரு லச்சா நூற்பவர்களுக்கு 12.50 ரூபாய் வழங்கப்படுகிறது, இது ஏப்ரல் 1, 2025 முதல் 2.50 ரூபாய் அதிகரிக்கப்படும். இப்போது கைவினைஞர்களுக்கு ஒரு லச்சா நூற்புக்கு 15 ரூபாய் கிடைக்கும். கடந்த 11 ஆண்டுகளில், காதி கைவினைஞர்களின் ஊதியத்தில் மத்திய அரசு வரலாற்று சிறப்புமிக்க 275 சதவீதம் அதிகரித்துள்ளது. காதி மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை 5 மடங்கு அதிகரித்துள்ளது, அதாவது 2023-24 நிதியாண்டில் 31,000 கோடி ரூபாயிலிருந்து 1,55,000 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. பிரயாக்ராஜ் மஹாகும்பத்தில் வரலாற்று சிறப்பமிக்க நிகழ்வாக 12.02 கோடி ரூபாய் மதிப்புள்ள காதி பொருட்கள் விற்பனையானது.



# இந்தியப் பெண்கள் தங்கள் நிதி எதிர்காலத்தை உருவாக்குகிறார்கள்

பெண்கள் நிதி ரீதியாக அதிகாரம் பெறும்போது, அதன் தாக்கம் அவர்களின் குடும்பங்களில் மட்டும் காணப்படுவதில்லை, ஆனால் அது நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்துகிறது. இந்த சிந்தனையுடன், கடந்த தசாப்தத்தில் இந்தியா தனது நிதி அமைப்பை நெறிப்படுத்துவதன் மூலம் ஒரு இயக்கத்தை முன்னெடுத்துள்ளது. அதில் பெண்கள் ஒரு புதிய வெற்றிக் கதையை எழுதுகிறார்கள். நிதி ஆயோக் மற்றும் கடன் தகவல் நிறுவனமான டிரான்ஸ்யூனியன் சிபில் நடத்திய ஒரு ஆய்வில், அரசாங்கத்தின் முயற்சிகள் சமூக மற்றும் பொருளாதார பங்கேற்பு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கான பெண்களின் அணுகலை வளர்த்துள்ளன என்றும், பல பகுதிகளில் உறுதியான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் நம்புகிறது. இது குடும்பம் மற்றும் சமூகத்தில் பெண்களின் பங்கேற்பிலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, சமூகத்தில், இப்போது பெண்கள் சுயமாக, ஒரு உறுதியான பாத்திரத்தில் வலுவாக முன்னேறி வருகிறார்கள்...

பிரதமரின் அனைவருக்கும் வங்கி கணக்கு திட்டத்தின் மூலம் பெண்களின் பொருளாதார சுதந்திரம் பலப்படுத்தப்பட்டுள்ளது, அதே நேரத்தில் பிரதமரின் முத்ரா திட்டம், நிமிர்ந்து நில் இந்தியா மற்றும் சுய உதவிக் குழுக்கள் போன்ற திட்டங்கள் அவர்களுக்கு நிதி ரீதியாக அதிகாரம் அளித்துள்ளன. பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான இந்த முன் முயற்சிகள் நாட்டின் பொருளாதார அடித்தளத்தை வலுப்படுத்த உதவுவதோடு, அவர்களின் குடும்பங்களின் நல்வாழ்வையும் மேம்படுத்த உதவுகின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் அனைவருக்கும் வங்கி கணக்கு திட்டம், பெண்கள் நிதியை புத்திசாலித்தனமாக நிர்வகிக்க அதிகாரம் அளித்துள்ள நிலையில், சுய உதவிக்குழுக்கள் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டில் முதலீடு செய்வதில் அவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. கடன் மற்றும் கல்வியில் பெண்களுக்கு சமமான அணுகல் என்பது அவர்களின் விருப்பங்களை சாதனைகளாக மாற்றுகிறது. இதற்கு ஒரு வாழும் உதாரணம் என்னவென்றால், அனைவருக்கும் வங்கி கணக்கு திட்டத்தில் 55 சதவீதத்திற்கும் அதிகமான கணக்குகள், பிரதமர் முத்ரா




## கடன்களை நாடும் பெண்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரிப்பு



**கடன் தேவையில் உயர்வு: 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடையே கடன்களை நாடும் பெண்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்தது. அதிகரித்து வரும் நிதி பங்களிப்பு மற்றும் சுதந்திரத்தை இது உணர்த்துகிறது.**

### இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் பெண்களின் பங்களிப்பு

தங்கள் கடன் நிலையைக் கண்காணிக்கும் பெண்கள் ( மில்லியன்களில்)




ஆதாரம்: டபிள்யூ.இ.பி ( நித்தி ஆயோக்), டிரான்ஸ்யூனியன் சிபில் மற்றும் மைக்ரோசேவ் கன்சல்டிங் கூட்டு அறிக்கை

**ஊரக மற்றும் நகர்ப்புறம் சார்ந்த பகுதிகள்:** மேலும் கடன் பெறும் பெண்களில் மெட்ரோ அல்லாத நகரங்களைச் சேர்ந்தவர்கள், மூன்றில் இரண்டு பங்கு அங்கம் வகிக்கிறார்கள். நகர்ப்புற மையங்களில் வலுவான நிதி உள்ளடக்கத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

**கடன் பற்றிய விழிப்புணர்வு அதிகரிப்பு:** குறிப்பிட்ட மாநிலத்தின் மெட்ரோ நகரங்களில் வசிக்கும் பெண்களை விட, மெட்ரோ அல்லாத நகரங்களைச் சேர்ந்த பெண்களிடையே, தங்கள் கடன் நிலவரத்தைக் கண்காணிக்கும் போக்கு அதிகமாகக் காணப்படுகிறது.


**சுய கண்காணிப்பில் உயர்வு** மெட்ரோ நகரங்களில் பதிவாகி இருக்கும் 30% அதிகரிப்புடன் ஒப்பிடும்போது மெட்ரோ அல்லாத நகரங்களில் ஏற்பட்டுள்ள 48% உயர்வு, சிறிய நகரங்களில் நிதி சார்ந்த எழுத்தறிவு மற்றும் பொறுப்பேற்பில் பெண்களிடையே ஏற்பட்டுள்ள மாற்றத்தை பிரதிபலிக்கிறது.

## பெண் கடன்தாரர்களின் கடன் புள்ளிகளில் முன்னேற்றம்

**62%** தங்கள் கடன் நிலையை கண்காணிக்கும் பெண்களில் 62% பேர் ப்ரைம் நிலை அல்லது அதற்கு மேற்பட்ட நிலைகளில் உள்ளனர்

சிறந்த கடன் நடைமுறைளை தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் கடன்களின் தீவிர மேலாண்மையை இது சுட்டிக்காட்டுகிறது. பெண் கடன்தாரர்கள் ஆரோக்கியமான கடனைக் கட்டமைக்க இது உதவியிருக்கிறது.

**பிராந்திய கடன் வழங்கல்:** தங்கள் கடன்களை சுயமாக கண்காணிக்கும் 1.02 கோடி பெண்களுடன் தென் மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன; ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் முதலியவை, பெண் கடன்தாரர்களின் எண்ணிக்கையில் அதிகபட்ச வளர்ச்சியை சந்தித்தன.




ஆதாரம்: டபிள்யூ.இ.பி (நித்தி ஆயோக்), டிரான்ஸ்யூனியன் சிபில் மற்றும் மைக்ரோசேவ் கன்சல்டிங் கூட்டு அறிக்கை

திட்டத்தில் சுமார் 70 சதவீதம் மற்றும் நிமிர்ந்து நில் இந்தியாவில் 82 சதவீதத்திற்கும் அதிகமான பயனாளிகள் பெண்கள் ஆவர். தனது பெண் குடிமக்களின் முழு திறனையும் பயன்படுத்தும் ஒரு நாடு உலகளாவிய அரங்கில் தனது இருப்பை அதிகரிப்பது மட்டுமல்லாமல் முதலீடுகளை ஈர்த்து சர்வதேச ஒத்துழைப்பையும் ஊக்குவிக்கிறது.


2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் அதிகாரம் அளித்தல் திட்டங்கள் அலுவலக ரீதியாக கடுமையாக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையில், புதிய தலைமையின் தொலைநோக்குப் பார்வை மற்றும் பணி முறை, பெண்களின் நிதி அதிகாரம் அளித்தல் மற்றும் உள்ளடக்கத்தை எதார்த்தமாக்கியது. கடன் பெறுபவர்கள் என்ற அளவில் பெண்களும் நிதித்துறை தலைவர்களாக வளர்ந்து வருகிறார்கள். இலக்கு நிர்ணயிக்கப்பட்ட முன்முயற்சிகளுடன் அதிக நிதி சுதந்திரத்தை பெண்கள் பெற்றிருப்பதுடன்,

## புதிய தலைமுறையினரின் அதிகரித்த பங்களிப்பு

கடன்களின் சுய கண்காணிப்பில் புதிய தலைமுறையினரின் பங்களிப்பு




## நன்கு சமநிலையான கடன் மதிப்பு




ஆதாரம்: டபிள்யூ.இ.பி ( நித்தி ஆயோக்), டிரான்ஸ்யூனியன் சிபில் மற்றும் மைக்ரோசேவ் கன்சல்டிங் கூட்டு அறிக்கை



பெண்களால் வழி நடத்தப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், இந்தியாவின் தொழில்துறையின் அடிப்படையை பன்முகப்படுத்தி, விநியோக சங்கிலிகள் மற்றும் ஏற்றுமதித் திறனை மேம்படுத்தியுள்ளன.



## கூடுதல் பயன்கள்

**அதிகரித்த குடும்ப நலன்:** மேம்பட்ட வாழ்க்கை தரநிலைகள் மற்றும் அடுத்த தலைமுறைக்கான வாய்ப்புகளுடன் குடும்ப நலன் முன்னேற்றம் அடைந்துள்ளது.

**பொருளாதார வலிமை:** பன்முகப்படுத்தப்பட்ட பங்களிப்பு, வலிமையான மற்றும் நிதி ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சரிவுகளை எதிர்கொள்ளக்கூடிய நெகிழ்வுத்தன்மை மிக்க பொருளாதார கட்டமைப்பிற்கு பங்களிக்கிறது.


**தொழில்முனைவு வளர்ச்சி:** பல்வேறு துறைகளில் புத்தாக்கம், வேலை உருவாக்கம் மற்றும் பன்முகத்தன்மையை ஊக்குவிக்கிறது.

**கொள்கை மேம்பாடு:** நிதித்துறைகளில் பெண்கள் அடைந்துள்ள வெற்றி, உள்ளடக்கிய கொள்கைகளை உருவாக்க கொள்கை வடிவமைப்பாளர்களை ஊக்குவிக்கிறது. இதன் மூலம் நலிவடைந்த பிரிவினருக்கான வாய்ப்புகள் அதிகரிக்கிறது.

**உலகளாவிய போட்டித்திறன்:** தனது பெண் குடிமக்களின் முழு திறனையும் பயன்படுத்தும் ஒரு நாடு உலகளாவிய அரங்கில் தனது போட்டித் திறனை அதிகரிப்பது மட்டுமல்லாமல், முதலீடுகளை ஈர்த்து சர்வதேச ஒத்துழைப்பையும் ஊக்குவிக்கிறது.

தொழில்முனைவு வாய்ப்புகளை விரிவுபடுத்தி, கடன் அணுகலை மேம்படுத்தி இருக்கிறார்கள். இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் உலகளாவிய போட்டித் திறனையும் இது கணிசமாக உயர்த்தி உள்ளது.

மார்ச் 2024 இல் நித்தி ஆயோக் மற்றும் கடன் தகவல் நிறுவனமான டிரான்ஸ்யூனியன் சிபில் நடத்திய ஒரு ஆய்வில், மத்திய அரசின் கொள்கைகளில் பெண் சக்தியின் அதிகரித்து வரும் பங்கு நாட்டின் நிதி வளர்ச்சி கதையில் ஒரு மைல்கல்லாக கருதப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. "கடன் பெறுபவர்களில் இருந்து கட்டமைப்பாளர்கள்: இந்தியாவின் நிதி வளர்ச்சிப் பயணத்தில் பெண்களின் பங்களிப்பு", என்ற தலைப்பிலான இந்த அறிக்கையில், ஒரு காலத்தில் குறைவாக மதிப்பிடப்பட்டு வந்த பெண் தொழிலாளர்கள் வலிமையான பொருளாதார தூணாக உருவெடுத்து, நாட்டின் வளர்ச்சியில் மிக முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அவர்களை இன்றியமையாத ஊடகமாக நிலை நிறுத்தியுள்ள பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பெண்களை மையமாகக் கொண்ட கொள்கைகள், இதற்குக் காரணமாக உள்ளன. இந்த மாற்றம் அதிகாரம் அளித்தலுக்கும் மேலானது; இந்தியாவின் பொருளாதார வலிமையை இது மறுவரையறை செய்துள்ளது. சாதாரண கடன் பயனர்கள் என்ற நிலையிலிருந்து, நிதி குறித்த விழிப்புணர்வுடன், கடன் பெறுவதில் அதிக ஈடுபாட்டுடன் பங்கேற்கும் நிலைக்கு பெண்கள் உருமாறி, நாட்டின் வளர்ச்சிப் போக்கை தீவிரமாக வடிவமைக்கிறார்கள்.



# விவசாயிகளுக்கான இ-நாம் ஒரு தேசம், ஒரே சந்தை

**உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயியான ராம்கிஷோர், தனது உருளைக்கிழங்குகளை விற்பனை செய்வதற்காக முன்பெல்லாம் அருகில் உள்ள மண்டிக்கு சென்று வந்தார். சில சமயம் நியாயமான விலை அவருக்கு கிடைக்கும்; இல்லையென்றால் இடைத்தரகர்களை அவர் நாட வேண்டியிருக்கும். ஆனால் தற்போது உத்தரப்பிரதேசம் முதல் ஹரியானா, பஞ்சாப் மற்றும் தில்லியில் உள்ள மண்டிகளின் விலைகளை தனது கைபேசியில் அவர் பார்த்து தெரிந்து கொள்ளலாம். நாடு முழுவதும் உள்ள வர்த்தகர்கள் அவரது பயிர்களை ஏலம் எடுக்கலாம், இதன் மூலம் அவருக்கு சிறந்த விலையைத் தேர்வு செய்யும் வாய்ப்பு கிடைக்கும். தமது விளைபொருளை விற்பனை செய்வதில் ராம்கிஷோருக்கு இந்தத் தளம் கூடுதல் அதிகாரத்தை வழங்கி இருக்கிறது. விவசாயிகளின் வருமானங்களை மேம்படுத்தும் குறிப்பிடத்தக்க சாதனமாக இ-நாம் திகழ்கிறது.**

நாட்டின் வேளாண்துறை, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 18% பங்களிப்பை வழங்குவதுடன், நாட்டின் சுமார் 50 சதவீத மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கிறது. இந்த முறை தங்களது விளைச்சல் நன்றாக இருக்கும், பயிர்களுக்கு நல்ல விலை கிடைக்கும், வாழ்க்கை பயணம் முன்னேற்றமடையும் என்ற நம்பிக்கையை ஒவ்வொரு முறையும் வெளிப்படுத்தும் விவசாயிகளின் கடுமையான உழைப்புதான் இந்த வலிமையான இலக்கங்களுக்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

ஏப்ரல் 14, 2016 அன்று தேசிய வேளாண் சந்தை என்ற இ-நாம் முன்முயற்சி தொடங்கப்பட்டதை அடுத்து விவசாயிகளின் கனவு நனவாகத் தொடங்கியுள்ளது. 'ஒரு தேசம், ஒரே வேளாண் சந்தை' என்ற கருத்துருவின் அடிப்படையில், வேளாண் பொருட்களுக்கான போட்டி சந்தையின் பயன்கள், இடைத்தரகர்களின் இடையீடு இல்லாமல் நேரடியாக விவசாயிகளுக்கு செல்லும் வகையில் 21 மண்டிகளை இணைத்து இந்தத் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இ-நாம் என்பது விவசாயிகளுக்கு சிறந்த விலையை வழங்கும் இணையவழி வர்த்தக சந்தையாகும். தங்களது விளைபொருட்களுக்கு அதிக விலை, அதிக ஏலம் கிடைக்கும்போது அவற்றை விற்பனை செய்யும் வசதியை விவசாயிக்கு வழங்குவதற்காக இ-நாம் தளத்தின் வாயிலாக வேளாண் விளைபொருள் மண்டிகள் டிஜிட்டல் வாயிலாக இணைக்கப்பட்டுள்ளன. இன்று நாடு முழுவதும் 27 மாநிலங்களில் 1466 மண்டிகள் இ-நாம் தளத்தில் இணைந்துள்ளன. நிர்ணயிக்கப்பட்ட தரநிலையின் அடிப்படையில் 231 வகை பொருட்கள் இந்தத் தளத்தில் விற்பனை செய்யப்படுவதுடன், 4 லட்சம் கோடி ரூபாய் விற்றுமுதல் பதிவாகியுள்ளது.

## மாநிலங்களுக்கு இடையேயான வேளாண் சந்தை அணுகலுக்கு இ-நாம் வழி வகுக்கும்

மாநிலங்களுக்கு இடையேயான மற்றும் சந்தைகளுக்கு இடையேயான வர்த்தகத்தில் விவசாயிகளுக்கு மிகப்பெரிய சிக்கலாக இருப்பது சரக்குப் போக்குவரத்து. இந்த இடர்பாடை நீக்கி இ-நாம் தளத்தை மேலும் செயல்திறன் மிக்கதாக மாற்றுவதற்காக இரண்டாவது கட்டத்திற்கு இதை தரம் உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த தளம் மிகவும் வலிமையானதாகவும், பயன்படுத்துவதற்கு எளிதானதாகவும், உள்ளடக்கியதாகவும் அளவிடக்கூடியதாகவும் இருப்பதுடன் திறந்தவெளி வலை அமைப்பிற்கு ஏற்றதாகவும் உள்ளது. இது சரக்குப் போக்குவரத்து சேவை வழங்குநர்களை உள்ளடக்கி இருப்பதுடன் வங்கி கணக்கு சரிபார்ப்பு, ஆதாரைப் பயன்படுத்தி மின்னணு கே.ஒய்.சி வசதி ஆகியவற்றையும் கொண்டிருக்கிறது.

### இப்போது விவசாயிகளுக்கு 5.5 மடங்கு நிதி ஒதுக்கீடு




* நிதியாண்டு 2024-25 இன் இலக்கங்கள் பிப்ரவரி 28 வரையிலானதாகும்

**இ-நாம்-ல் யாரெல்லாம் இணைந்திருக்கிறார்கள்**

மொத்தம் **1,82,61,076**

| | |
|---|---|
| மாநிலங்கள் | 27 |
| வர்த்தகர்கள் | 2,64,111 |
| தரகு முகவர்கள் | 1,14,942 |
| சேவை வழங்குனர்கள் | 79 |
| உழவர் அமைப்புகள் | 4,389 |
| விவசாயிகள் | 1,78,77,555 |

பட்ஜெட்டிற்குப் பிறகு பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்

# வளர்ச்சியடைந்த பாரதத்தை கட்டமைப்பதற்கான பாதை

**பழைய பாரம்பரியங்களை உடைத்தெறிவதற்கு பிரதமர் நரேந்திர மோடி பெயர் பெற்றுள்ளார். நாட்டின் நலனை முன்னிட்டு கொள்கைகளை தீர்மானங்களாக மாற்ற அவர் உறுதியாக இருக்கிறார். பல ஆண்டுகளாக நாட்டில் இருந்து வரும் பழைய நடைமுறைகளை மாற்றி அமைத்து, புதிய உச்ச வரம்புகளை அவர் உருவாக்கியிருப்பதை அடுத்து, வளர்ச்சியடைந்த தேசமாக முன்னேறும் பாதையில் நாடு சென்று கொண்டிருக்கிறது. பொது நிதிநிலை அறிக்கையை ஒரு மாதம் முன்கூட்டியே அறிவிப்பதில் ஆகட்டும், பட்ஜெட்டிற்கு பிறகு தீர்மானங்களை நிறைவேற்றும் முன்முயற்சியால் ஆகட்டும், நாட்டின் கடைக்கோடி குடிமகன் கூட நேரடியாக பயனடைவதற்காக பங்குதாரர்களை இணைத்து பட்ஜெட் தொடர்பான இணையவழி கருத்தரங்கங்களின் வாயிலாக பிரதமர் மோடி புதிய பாரம்பரியம் ஒன்றையும் அறிமுகப்படுத்தினார். கடந்த 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பங்குதாரர்களுடன் பட்ஜெட்டிற்கு பிந்தைய வலைதள கருத்தரங்கங்களின் ஐந்தாவது வருடத்தில், நான்கு கருத்தரங்கங்கள் மூலம் பிரதமர் நேரடியாக உரையாற்றினார்...**

கடந்த 10 ஆண்டுகளில் சீர்திருத்தம், நிதி ஒழுங்குமுறை, வெளிப்படைத் தன்மை மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியின் மூலம் இந்தியா தொடர்ச்சியான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. எனவே இந்த முறையும், கொள்கைகளின் தொடர்ச்சியையும் வளர்ச்சியடைந்த பாரதத்தின் தொலைநோக்குப் பார்வையையும் பொது நிதிநிலை அறிக்கை தெளிவாக பிரதிபலிக்கிறது. பொது நிதிநிலை அறிக்கையுடன், மார்ச் 1-ஆம் தேதி முதல் பல்வேறு துறைகளில் பங்குதாரர்களுடன் பட்ஜெட் குறித்த இணையவழி கருத்தரங்கங்களில் பிரதமர் நரேந்திர மோடி உரையாடத் தொடங்கினார். திட்டங்களை உரிய நேரத்தில் செயல்படுத்தவும் தகுதியானவர்களுக்கு பயன்களை முறையாக கொண்டு சேர்க்கவும் வேளாண்மை, வேலைவாய்ப்பு, தொழில்துறை-வர்த்தகம், கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு மற்றும் முதலீடு போன்ற தலைப்புகள் சம்பந்தமான இணைய வழி கருத்தரங்கங்களை பிரதமர் மோடி ஏற்பாடு செய்து வருகிறார். வேளாண்மை மற்றும் ஊரக வளம் குறித்த கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர் மோடி, இதனை இந்தியாவின் வளர்ச்சியின் முதல் எஞ்சின் என்று வர்ணித்ததுடன், கிராமங்களின் செழுமையின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார். இந்தத் துறையில் கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுடன், 2025- 26 ஆண்டிற்கான பொது நிதிநிலை அறிக்கையில் இந்தத் துறை சம்பந்தமாக அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை முறையாக அமல்படுத்துவதில் தமது உறுதிபாட்டையும் அவர் வெளிப்படுத்தினார்.



குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பற்றிய இணைய வழி கருத்தரங்கில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, கடந்த 10 ஆண்டுகளில் சீர்திருத்தம், நிதி ஒழுங்குமுறை, வெளிப்படைத் தன்மை மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியின் மூலம் இந்தியா தொடர்ச்சியான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது என்று கூறினார்.

இதன் விளைவாக, இன்று, இந்தியாவுடன் பொருளாதார கூட்டு முயற்சிகளை வலுப்படுத்த உலக நாடுகள் அனைத்தும் ஆர்வம் தெரிவிக்கின்றன. இந்த தொடர்ச்சியானது வரும் ஆண்டுகளில் துரிதமடையும் என்று உற்பத்தி மற்றும் ஏற்றுமதியுடன் தொடர்புடைய பங்குதாரர்களிடம் அவர் உறுதியளித்தார். மறுபுறம் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை மையமாகக் கொண்டு குடிமக்களின் நலனில் முதலீடு செய்யும் அணுகுமுறை கல்வி, திறன் மற்றும் சுகாதாரம் ஆகிய மூன்று தூண்களின் அடிப்படையில் அமைந்திருப்பதாக பிரதமர் மோடி குறிப்பிட்டார். 'குடிமக்கள், பொருளாதாரம் மற்றும் புத்தாக்கத்தில் முதலீடு' என்ற தலைப்பில் இணையவழி கருத்தரங்கில் பேசிய பிரதமர், இந்த கருப்பொருள், வளர்ச்சியடைந்த பாரதத்தின் செயல் திட்டத்தை வரையறுப்பதாகத் தெரிவித்தார்.

இணையவழி கருத்தரங்கு மூலமான நேரடி உரையின்போது, பல்வேறு துறைகளுக்கான பட்ஜெட் அறிவிப்புகள் மற்றும் அவற்றின் செயல் திறன் வாய்ந்த அமலாக்கம் குறித்து விளக்கியதுடன் கடந்த 10 ஆண்டுகளில் அரசு மேற்கொண்ட முயற்சிகளையும் சுட்டிக்காட்டினார். பிரதமர் மோடி ஆற்றிய உரையின் தொகுக்கப்பட்ட பகுதிகளை வாசிக்கவும்...

## வேளாண்மை மற்றும் ஊரக செழுமை, இந்தியாவின் வளர்ச்சியின் பாதையாக மாறும்

பிரதமரின் விவசாயிகள் நல நிதித் திட்டத்தைக் குறிப்பிட்ட பிரதமர் மோடி, இந்தத் திட்டம் 6 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டுவரப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு

**3.75 லட்சம் கோடி** ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை, சுமார் 11 கோடி விவசாயிகளின் கணக்குகளுக்கு நேரடியாக பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.



பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்த பிரதமரின் தன் தானிய கிரிஷி திட்டத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிட்டு, இத்திட்டத்தின் கீழ் நாட்டில் வேளாண் உற்பத்தி மிகக் குறைவாக உள்ள **100** மாவட்டங்களில் வளர்ச்சியை அதிகரிக்க கவனம் செலுத்தப்படும் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

இதன்மூலம் இந்த 100 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் வருமானம் உயர்வதற்கு இந்தத் திட்டம் உதவிகரமாக இருக்கும்.

அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் காரணமாக, 10-11 ஆண்டுகளுக்கு முன்பு சுமார் 265 மில்லியன் டன்னாக இருந்த வேளாண் உற்பத்தி, தற்போது 330 மில்லியன் டன்னுக்கும் அதிகமாக உயர்ந்திருக்கிறது, என்றார் அவர். தோட்டக்கலை உற்பத்தி ஏறத்தாழ 350 மில்லியன் டன்னாக அதிகரித்திருக்கிறது. விதையில் தொடங்கி சந்தை வரையில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் காரணமாக இது நிகழ்ந்துள்ளது.

உள்நாட்டு பருப்பு நுகர்வில் ஏறத்தாழ 20% இன்னும் வெளிநாடுகளை சார்ந்திருப்பதாக பிரதமர் மோடி குறிப்பிட்டார். பருப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடலை மற்றும் பாசிப்பயறு உற்பத்தியில் நாடு தன்னிறைவை அடைந்துள்ளது.

- புதிய பயிர் வகைகளின் வளர்ச்சி பற்றி பேசிய பிரதமர் மோடி, கடந்த 10 ஆண்டுகளில் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் நவீன உபகரணங்கள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியிருப்பதாகக் கூறினார். இதன் மூலம் 2014 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடையே தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், கால்நடை தீவனம் மற்றும் கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்களின் சுமார் 2900 புதிய வகைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- சுதந்திரம் அடைந்தது முதல் மீன்வளத் துறைக்கு மிகப்பெரிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தைக் குறிப்பிட்ட பிரதமர், மீன்வளத்துறையில் உற்பத்தி, உற்பத்தித் திறன் மற்றும் மேலாண்மையை மேம்படுத்த இந்தத் திட்டம் உதவி இருப்பதாகத் தெரிவித்தார். நாட்டில் இன்று மீன் உற்பத்தியும், ஏற்றுமதியும் இருமடங்காக உயர்ந்துள்ளது.

வளமான ஊரக பொருளாதாரத்தை நோக்கிய இந்தியாவின் முயற்சிகள் பற்றி பேசுகையில், பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், கோடிக்கணக்கான மக்களுக்கு உறுதியான வீடுகள் வழங்கப்படுவதுடன், ஸ்வாமித்வா திட்டத்தின் மூலம் நிலத்தின் உரிமைதாரர்களுக்கு 'ஆவண உரிமையும்' வழங்கப்படுகிறது என்று பிரதமர் மோடி கூறினார். 3 கோடி லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுமார் 1.25 கோடி பேர் லட்சாதிபதி சகோதரிகளாக மாறியிருக்கிறார்கள்.



# வேலைவாய்ப்பு, கல்வி,
## சுகாதாரம் மற்றும் பொருளாதாரம்

எந்தவொரு நாட்டிற்கும் மிகவும் முக்கியமான அமைப்புகளாக சிறந்த கல்வி, வலுவான சுகாதார கட்டமைப்பு, வேலைவாய்ப்புகள் ஆகியவை திகழ்கின்றன. பிரதமர் நரேந்திர மோடி கூறும்போது, கட்டமைப்பு மற்றும் தொழில்துறைக்கான முதலீட்டுக்கு வழங்கும் முக்கியத்துவத்தைப் போன்றே, நாட்டு மக்கள், பொருளாதாரம், புத்தாக்கம் ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்தார். இந்த விவகாரங்களில் தொடர்புடைய ஒவ்வொரு அம்சங்கள் குறித்தும் தனது சிந்தனைகளை அவர் பகிர்ந்துகொண்டார்.



- திறன் வளர்ப்புக்கும், திறமையை வெளிக் கொண்டுவருவதற்கும் பணியாற்றி வருகிறோம். இது நாட்டின் வளர்ச்சிக்கான அடிப்படையாக அமையும்.
- பொதுமக்களுக்கான முதலீட்டுக் கொள்கையில், கல்வி, திறன் மற்றும் சுகாதாரம் ஆகிய மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன.
- தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துதல், ஐஐடி-க்களை விரிவாக்கம் செய்வது, கல்வி அமைப்பில் தொழில்நுட்பத்தை புகுத்துதல், முழு அளவுக்கு செயற்கை நுண்ணறிவு பயன்பாடு, டிஜிட்டல் மயமாக்கப்படும் பாடப்புத்தகங்கள், 22 இந்திய மொழிகளில் கற்பித்தல் ஆவணங்களை வழங்குவதற்கு தீவிர பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*2014-ம் ஆண்டு முதல்* **3** கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சியை மத்திய அரசு வழங்கியுள்ளது

- 1,000 ஐடிஐ-களை மேம்படுத்தவும், 5 அதிதிறன் மையங்களை உருவாக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
- தொழில் துறையின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதே அரசின் இலக்காக உள்ளது.
- இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை அளிக்கவும், செயல்முறை திறனை அளிக்கவும் பிரதமரின் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- மருத்துவப் படிப்பில் கூடுதலாக 10,000 இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அடுத்த 5 ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரிகளில் 75,000 இடங்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களுக்கும் தொலை மருத்துவ வசதிகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன.
- டிஜிட்டல் சுகாதார வசதிகள் மூலம், சமூகத்தில் கடைநிலையில் உள்ள மக்களுக்கும் தரமான மருத்துவ சேவையை வழங்குவதற்காக பகல் நேர புற்றுநோய் சிகிச்சைக்கான சுகாதார மையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



- இந்தியாவில் நகர்ப்பகுதிகளில் வாழும் மக்களின் எண்ணிக்கை, 2047-ம் ஆண்டில் சுமார் 90 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மிகப்பெரும் மக்கள்தொகைக்காக திட்டமிடப்பட்ட நகரமயமாக்கல் அவசியமாகிறது. இதற்காக, 1 லட்சம் கோடி ரூபாயில் நகர்ப்புற கட்டமைப்பு நிதியை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதம் அளவுக்கு சுற்றுலாத் துறையின் பங்களிப்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துறையில் கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திறன் உள்ளது. இதன் காரணமாக, இந்த பட்ஜெட்டில், உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாவை ஊக்குவிக்க பல்வேறு அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

சுற்றுலாவுக்கு கவனம் செலுத்தும் வகையில், நாடு முழுவதும் **50** இடங்கள் மேம்படுத்தப்பட உள்ளன. இந்த இடங்களில் உள்ள தங்கும் விடுதிகளுக்கு கட்டமைப்புத் திறனை வழங்குவதன்மூலம், சுற்றுலா துறைக்கு எளிதான வழிவகை ஏற்படும். இது உள்ளூர் வேலைவாய்ப்புகளையும் ஊக்குவிக்கும்.

- "இந்தியாவில் சிகிச்சை அளிப்போம்", "புத்த பூமி" போன்ற இயக்கங்கள் மூலம், உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலா பயணிகள் ஈர்க்கப்படுகின்றனர்.
- இந்தியப் பொருளாதாரத்தில் பல லட்சம் கோடி ரூபாயை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் சேர்க்க முடியும். இதன் காரணமாக, இந்த பட்ஜெட்டில், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவுத் திறனை உருவாக்குவதற்காக தேசிய அளவிலான மிகப்பெரும் மொழி மாதிரியைக் கூட இந்தியா உருவாக்க உள்ளது.
- உலகில் புத்தொழில் நிறுவன சூழலியலைக் கொண்ட மூன்றாவது மிகப்பெரும் நாடாக இந்தியா தற்போது திகழ்கிறது. இது தொடர்பான ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை விரிவுபடுத்துவதற்காக 1 லட்சம் கோடி ரூபாய் நிதியத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- ஐஐடி மற்றும் ஐஐஎஸ்சி-யில் 10,000 ஆராய்ச்சிப் படிப்பு இடங்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது ஆராய்ச்சியை ஊக்குவித்து, திறமைவாய்ந்த இளைஞர்களுக்கு வாய்ப்பு கிடைக்கச் செய்யும்.

## பொருளாதார வளர்ச்சியின் இயந்திரங்களாக சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள்

**உற்பத்தி, ஏற்றுமதி, அணுசக்தி இயக்கம், ஒழுங்குமுறை, முதலீடு மற்றும் எளிதாக தொழில் செய்வது ஆகியவை தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இணையவழி கலந்துரையாடலில் கலந்துகொண்டு பேசிய பிரதமர் நரேந்திர மோடி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் இயந்திரங்களாக சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் இருப்பதாக தெரிவித்தார். மேலும் அவர், இந்தத் துறைக்காக கடந்த 10 ஆண்டுகளாக மத்திய அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளை பட்டியலிட்டார். பட்ஜெட்டில் வழங்கப்பட்டுள்ள புதிய வழிமுறைகளால், இந்தத் துறை மேலும் வலுவடையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.**





உறுதியான நடவடிக்கைகளை எடுக்க தொழில் துறையினரை பிரதமர் மோடி ஊக்குவித்தார். நாட்டில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்காக புதிய வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

வருமான வரிக்காக எளிதான வழிமுறைகளை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. ஜன் விஷ்வாஸ் 2.0 மசோதாவை கொண்டுவருவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய, மாநில அளவில் **40,000**-க்கும் மேற்பட்ட வழிமுறைகள் நீக்கப்பட்டுள்ளன. இது தொழில் செய்வதை எளிதாக்கியுள்ளது.

நிதியல்லா துறைகளை நவீனமாக்கவும், நெகிழ்வுத் தன்மை கொண்டதாகவும், மக்களுக்கு ஏற்றதாகவும், நம்பிக்கை அடிப்படையிலானதாகவும் மாற்றும் வகையில், ஏற்கனவே உள்ள விதிகளை மறுஆய்வு செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

- கொரோனா பெருந்தொற்று காலத்தில், உலகப் பொருளாதாரம் வீழ்ச்சியை சந்தித்த நிலையில், உலகளாவிய வளர்ச்சியை இந்தியா ஊக்குவித்துள்ளது.
- தற்போது உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை திட்டத்தின்மூலம், 14 துறைகள் பலனடைந்து வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ், 750-க்கும் மேற்பட்ட பிரிவுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- இதன் பலனாக, 1.5 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் முதலீடும், 13 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான உற்பத்தியும், 5 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான ஏற்றுமதியும் கிடைத்துள்ளது.



- 14 ஆண்டுகளுக்குப் பிறகு, 2020-ம் ஆண்டில் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கான வரையறையை மாற்றியமைக்க மத்திய அரசு முக்கிய முடிவை மேற்கொண்டது. இதன்மூலம், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு புதிய பகுதிகளுக்குள் வரும்போது, அரசின் பலன்களை இழந்துவிடுவோம் என்ற அச்சம், விலகியது.



**நாட்டில் உள்ள சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கை 6 கோடிக்கும் மேலாக அதிகரித்துள்ளது. இது கோடிக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கிறது.**

- 10 ஆண்டுகளுக்கு முன்பு, சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு 12 லட்சம் கோடி ரூபாய் கடன் கிடைத்த நிலையில், தற்போது இது 30 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- பட்ஜெட்டில், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத அளவு இரண்டு மடங்காக்கப்பட்டு 20 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- செயல் மூலதன தேவைகளை எதிர்கொள்ளும் வகையில், 5 லட்சம் ரூபாய் உச்சவரம்புடன் கடன் அட்டைகள் வழங்கப்பட உள்ளன.
- கடந்த 10 ஆண்டுகளில், உத்தரவாதம் இல்லாமல் கடன்களை வழங்கும் பிரதமரின் முத்ரா போன்ற திட்டங்களும் சிறு நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்தன.

தாழ்த்தப்பட்ட, பழங்குடியின சமூகங்களைச் சேர்ந்த **5** லட்சம் முதல் தலைமுறை பெண் தொழில்முனைவோருக்கு 2 கோடி ரூபாய் கடன் கிடைக்க உள்ளது.



அட்டைப்பக்கக் கட்டுரை

முத்ரா திட்டத்தின் 10 ஆண்டுகள்

# "முத்ரா" மூலம் தொழில் முனைவின் அமிர்த நீர்வீழ்ச்சி

*10 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட முத்ரா திட்டத்தின் கீழ், 52 கோடிக்கும் மேலான கடன்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 33 லட்சம் கோடி ரூபாய்க்கு மேலான தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. இது இளைஞர்கள், பெண்கள், சமூகத்தின் பின்தங்கியோர், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு தொழில்முனைவோராக மாறுவதற்கான வாய்ப்பை அளித்தது. இதற்கு முன்னதாக குறைத்து மதிப்பிடப்பட்டவர்களின் தொழில்முனைவோர் திறன் மீது நம்பிக்கை வைப்பதே முத்ரா திட்டத்தின் அம்சமாக உள்ளது. மத்திய அரசின் இந்த மாற்றத்துக்கான முயற்சியின் மூலம், இடைத்தரகர்களின் தலையீடுகளிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட்டனர். மேலும், இது நிதி ஆதாரங்களுடன் அவர்களை மேம்படுத்தி பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அவர்களை வலுப்படுத்தியுள்ளது. வளர்ந்த இந்தியா என்ற கனவை நனவாக்குவதற்கான வலுவான அடித்தளத்தை இந்தத் திட்டம் தற்போது அமைத்துள்ளது.*











## பினிதாவின் கனவுகளுக்கு இறகுகள் கொடுத்த முத்ரா திட்டம்

வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று கனவு கண்ட பெண்களில் ஒருவர் தான் பினிதா தேவ்நாத். ஆனால், நிதி இல்லாமல், கனவுகளை நனவாக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை. பட்டு உற்பத்தியில் சிறந்த



புரிதல் கொண்டிருந்த பினிதா, இந்தத் துறையில் தனது கரத்தை வலுப்படுத்த விரும்பினார். தொலைக்காட்சி மூலம் பிரதமரின் முத்ரா திட்டம் குறித்து அறிந்து கொண்டார். வங்கியை அணுகிய அவர், எந்தவொரு தடையும் இல்லாமல், பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் கடன் பெற்றார். முத்ரா திட்டத்தின் மூலம் 1.99 லட்சம் ரூபாய் கடன் பெற்று தனது தொழிலை தொடங்கினார். தொழில் வளர்ச்சியடைந்த நிலையில், 4 லட்சம் ரூபாய் கடன் கேட்டு மீண்டும் விண்ணப்பித்தார். இதன்பிறகு, தனது பணியை மீண்டும் வலுப்படுத்தினார். இன்று, அசாமின் அடையாளமான மேகலா மற்றும் ரிஹா-சதோர் பட்டுப் புடவைகளை தயாரித்து விற்பனை செய்ததன்மூலம், வெற்றிகரமான தொழில்முனைவோராக மாறினார்.

## தினக்கூலி தொழிலாளியிலிருந்து மாவு மில் உரிமையாளர்

தமிழ்நாட்டைச் சேர்ந்த சரஸ்வதி, மாவு ஆலையில் தினக் கூலி தொழிலாளியாக பணியாற்றி வந்தார். சொந்தமாக மாவு ஆலையை தொடங்க வேண்டும் என்று கனவு கண்டார். ஆனால், போதிய நிதி



இல்லாத காரணத்தால், சொந்தமாக தொழிலைத் தொடங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டார். இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த சரஸ்வதி, கடந்த 2022-ஆம் ஆண்டில் பிரதமரின் முத்ரா திட்டம் குறித்து அறிந்து கொண்டார். சொந்தமாக மாவு ஆலை அமைப்பதற்கு எவ்வளவு தொகை தேவைப்படும் என்று விசாரித்தபோது, 5 லட்சம் ரூபாய்க்கும் குறைவான தொகை இருந்தால்போதும் என்பதை அறிந்துகொண்டார். இந்தியன் வங்கியின் செங்குன்றம் கிளையில், கடனுக்கு விண்ணப்பித்து 4.86 லட்சம் ரூபாய் கடனைப் பெற்றார். தற்போது, வேலைக்கு செல்பவராகவோ அல்லது தினக்கூலி தொழிலாளராகவோ இல்லாமல், வேலை வழங்குபவராக மாறியுள்ளார். தனது திருநாவுக்கரசு மாவு ஆலையில் 4 பேரை வேலைக்கு அமர்த்தியுள்ளார்.








இதே போன்று இந்தியாவில் தொழில்முனைவோர் திறனை முற்றிலும் மாற்றியமைத்தது தொடர்பாக லட்சக்கணக்கான வெற்றிக் கதைகள் உள்ளன. இது ஏழைத் தொழிலாளர்களின் பொருளாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட தேசிய இயக்கமாக முத்ரா திட்டம் இருப்பதைக் காட்டுகிறது. இந்த கனவுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், புதிய பொருளாதார வழிமுறையை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இது தங்களது பாரம்பரியமான ஆளுமையைத் தாண்டி, கல்விகற்ற இளைஞர்கள் உள்ளிட்ட தொழில்முனைவோராக மாற விரும்பும் சந்ததியினருக்கு நிதி ஆதாரத்தை உருவாக்கி, அவர்களின் கனவை நனவாக்க உதவுகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் கவனம்

mudra


## பிரதமரின் முத்ரா திட்டத்தில் பயனாளிகளின் பங்களிப்பு

### கடன்களின் அளவு




தருண் பிளஸ் திட்டம் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது

### அனுமதிக்கப்பட்ட தொகை




### அனுமதிக்கப்பட்ட முத்ரா கடன் தொகை

| | |
|---|---|
| ஷிசு பிரிவு | 11,68,019+ |
| கிஷோர் பிரிவு | 13,39,994+ |
| தருண் பிரிவு | 8,08,541+ |
| தருண் பிளஸ் பிரிவு | 2,818 |

*தொகை கோடி ரூபாயில்

பிப்ரவரி 28, 2025 வரை வழங்கப்பட்ட கடன்கள்




செலுத்துவதுடன், மிகவும் பின்தங்கிய மக்களை சென்றடையும் நோக்குடன், கடைசி நிலையில் உள்ள மனிதர்களையும் மேம்படுத்துவதை கொள்கையாகக் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. "அனைவரின் நலன், அனைவரின் மகிழ்ச்சி" என்ற இலக்கை அடையும் வகையில், முத்ரா திட்டத்தின் கீழ் தனிநபர்களை அரசு மேம்படுத்தி வருகிறது. மேலும், நாட்டின் வளர்ச்சியில் அவர்களையும் பங்குதாரர்களாக மாற்றியுள்ளது. சமூகநீதி மற்றும் அரசியல்சாசனத்தை கட்டமைத்தவரான பாபாசாகேப் பீமாராவ் அம்பேத்கரின் 135-வது பிறந்த தினம் இந்த ஆண்டில் கொண்டாடப்படும் நிலையில், குறிப்பிடத்தக்க மைல்கல் எட்டப்பட்டுள்ளது. சிறு வணிகர்களுக்கு மிகப்பெரும் ஆதரவு அளிக்கும் பிரதமரின் முத்ரா திட்டம், ஏப்ரல் 8-ல் 10-வது ஆண்டு விழாவை கொண்டாட உள்ளது.


டாக்டர் அம்பேத்கரின் தொலைநோக்கு சிந்தனையின் பலனாக, சமூக அநீதிக்கு முடிவுகட்டுவதற்கு, நவீனமாக்குவதில் கவனம் செலுத்தப்படுகிறது. நகரமயமாக்கலும், தொழில்துறைமயமாக்கலும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் வகையில் சமூகம் இருக்க வேண்டும் என்பதே அவரது கனவாக இருந்தது. திறன் மற்றும் சமமான வாய்ப்புகளின் அடிப்படையில், தொழில் துறை நாகரீகம் என்பது மேம்பட வேண்டும். அரசு துறைகளில் போதிய வாய்ப்புகள் இல்லாததால், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என அனைத்து தரப்பினரும் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகளை தேடத் தொடங்கினர். புதிய முறையிலான தொழில்களையும் அவர்கள் தேடுகின்றனர். முத்ரா திட்டத்தின் மூலம், அவர்களுக்கு புதிய வாய்ப்புகளை மத்திய அரசு வழங்கி வருகிறது.

வேலைவாய்ப்புக்கான ஆதாரமாக மிகப்பெரும் தொழில் நிறுவனங்களே இருப்பதாக நீண்டகாலமாக நம்பப்பட்டு வந்தது.

> நாட்டில் உள்ள கோடிக்கணக்கான சாதாரண ஆண்களும், பெண்களும் சிறு தொழில்களை நடத்தி வருகின்றனர். பொருளாதாரத்துக்கு மிகப்பெரும் பங்களிப்பை அவர்கள் அளித்து வந்த போதிலும், முறைப்படியான நிதி நிறுவனங்கள் மூலம் அவர்களுக்கு நிதி கிடைப்பதில்லை. பின்தங்கியுள்ள மக்களுக்கு நிதி வழங்குவதற்கான நமது புத்தாக்க முயற்சியே முத்ரா திட்டம்.
>
> நரேந்திர மோடி, பிரதமர்

இருந்தாலும், இந்த மிகப்பெரும் நிறுவனங்களில் 1.25 கோடி வேலைவாய்ப்புகள் மட்டுமே உள்ளன. மறுமுனையில், சுமார் 6 கோடி பேர் சிறு தொழில்களை செய்து வருகின்றனர்.

குறைந்த அளவிலான ஆதரவுடன், இந்த சிறு வணிக உரிமையாளர்கள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த முடியும். இந்த யோசனை பிரதமரின் முத்ரா திட்டத்துக்கு வழிவகுத்தது. இன்று, நாட்டின் பொருளாதார அடித்தளத்தை வலுப்படுத்தக்கூடிய சிறு தொழில்முனைவோரை மேம்படுத்துவதில் மத்திய அரசு




குறிப்பு: நிதியாண்டு 2024-25-ல் பிப்ரவரி 28 வரையிலான புள்ளி விவரம்

கவனம் செலுத்துகிறது. சிறிய நிதி அமைப்புகளின் செயல்பாட்டை செயல்படுத்தும் ஒரு தளமாக முத்ரா செயல்படுகிறது. இந்த சிறு வணிகங்களின் வளர்ச்சியை அது ஆதரிக்கிறது.

உண்மையில், நாட்டின் பொருளாதாரம் ஒரு பிரமிடை ஒத்திருக்கிறது, அங்கு அனைவரும் முன்னேற முயற்சி செய்கிறார்கள். மேலே, உயரடுக்கில் ஏராளமான வளங்கள் இருந்தன. ஆனால் கீழே இருப்பவர்கள் சமூக ஆதரவு, வங்கிச் சேவைகள், தகவல் மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றின் பற்றாக்குறையை எதிர்கொண்டனர். இந்தப் பிரிவில், சிறு வணிகர்கள், காய்கறி வியாபாரிகள், பழுதுபார்ப்பவர்கள், ஓட்டுநர்கள், வீடு சார்ந்த வணிகங்கள் மற்றும் சாலையோர வியாபாரிகள் போன்ற 5.5 கோடிக்கும் அதிகமான சிறிய அளவிலான அலகுகள் உள்ளன. இந்தக் கடன்கள் 24 முதல் 36 சதவீதம் வரை வட்டி விகிதங்களைக் கொண்டிருந்தன. அடித்தட்டு அளவில் வங்கிகள் இருந்தபோதிலும், இந்த சிறுதொழில்முனைவோரின் திறமையில் நம்பிக்கை இல்லாமல், அவர்களுக்கு கடன் தர மறுத்துவிட்டன. இது ஏழைகள் தங்கள் நிதிப் போராட்டங்களில் இருந்து தப்பிக்க முடியுமா என்ற கேள்வியை எழுப்பியது. மனிதர்களின் மீது நம்பிக்கை வைப்பதுதான் ஒரே வழி என்பதை தெளிவாக்கியது. இது ஒரு சவாலான பணியாக இருந்தது, ஆனால் இப்போது இல்லையென்றால், எப்போது? இந்த நம்பிக்கையுடன், இந்தியாவில் குறு நிதியின் கட்டமைப்பை மாற்றுவதற்கு, முத்ரா எனப்படும் குறு அலகுகள் மேம்பாடு மற்றும் மறுநிதி முகமை என்னும் அமைப்பை உருவாக்குவதன் மூலம் அரசு ஒரு அற்புதமான நடவடிக்கையை எடுத்தது. இந்த முயற்சி

மொத்தக் கடன்களின் எண்ணிக்கை
**52.07**
கோடி

மொத்தத் தொகை
**33.19**
லட்சம் கோடி

- **2022-23 நிதியாண்டில், மொத்தக் கடன் எண்ணிக்கையில், பெண் பயனாளிகள் 71% ஆவர். இது, பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ், அனுமதிக்கப்பட்ட கடன் தொகையில் 48% ஆகும்.**
- **இதில், சிஷூ மற்றும் கிஷோர் பிரிவில் பெண்களுக்கு 99% கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.**

கோடிக்கணக்கான மக்களுக்கு அதிகாரமளிப்பதற்கான திறவுகோலாக மாறியது. ஆற்றல் மற்றும் லட்சியம் நிறைந்த இளைஞர்களைக் கொண்ட நாடான இந்தியா, தேசிய வளர்ச்சிக்கு அதன் புதுமையான உணர்வைப் பயன்படுத்த வேண்டும். அதன் மக்களின் தொழில்முனைவுத் திறனைப் பயன்படுத்துவதன் மூலம், நாடு அதன் பொருளாதார சூழல் அமைப்பில் இருக்கும்

## சிந்து, தனது குடும்பத்தை ஆதரிக்க முத்ரா உதவியது


கேரள மாநிலத்தில் ஒரு சிறிய கிராமமான நிலாம்பூரைச் சேர்ந்த சிந்து, சொந்தமாக ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பினார். பஞ்சு மற்றும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி, பாய்களை உருவாக்குவது பற்றி உறவினர் ஒருவரிடமிருந்து கற்றுக்கொண்டார்.



இந்தத் தொழிலைச் செய்வதில் ஆர்வம் கொண்டிருந்த சிந்து நிதிச்சிக்கல்களை எதிர்கொண்டார். அதனால் சோர்ந்து போகாத அவர் ஒரு உறவினர் உதவியுடன், முத்ரா திட்டத்தின் கீழ், கடன் பெற்றார். இதன் மூலம், அவர்கள் இணைந்து சிறிய அலகை ஏற்படுத்தி, தினசரி 10 முதல் 15 பாய்களை தயாரிக்கத் தொடங்கினர். பெரிய நிறுவனங்களின் தொடர்பு கிடைத்ததையடுத்து, சிந்து மாதந்தோறும் 400 முதல் 500 பாய்களை வெற்றிகரமாக விற்பனை செய்தார். தேவை அதிகரித்ததைத் தொடர்ந்து, மேலும் இரண்டு எந்திரங்களை வாங்கி, மூன்று பெண்களைப் பணியமர்த்தி, தனது தொழிலை விரிவுபடுத்தினார். இன்று, சிந்து சுயமாக நிற்பதுடன், அவரது குடும்பத்தின் பொருளாதார முதுகெலும்பாக மாறியுள்ளார்.

## பெண்களின் பங்களிப்பு


கடன்களின் எண்ணிக்கை



68% பெண்கள்

32% ஆண்கள்

தொகை



44% பெண்கள்

56% ஆண்கள்



இடைவெளிகளைக் களைய முடியும். இந்தியாவில் தொழில் முனைவோர் திறனைப் பயன்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து, மத்திய அரசு முத்ரா திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது கோடிக்கணக்கான மக்களுக்கு கனவுகள் மற்றும் விருப்பங்களுடன் சுயமரியாதை மற்றும் சுதந்திர உணர்வைக் கொடுத்தது.

### முதலீட்டுடன் புதிய தொழில்முனைவோரை ஆதரித்தல்

ஒரு காலத்தில் கந்து வட்டிக்காரர்களிடம் கடன் வாங்கி, மக்கள் சொல்லமுடியாத அல்லல்களை அனுபவித்தனர். அவர்கள் 24% முதல் 30% வரை வட்டி செலுத்த வேண்டியிருந்தது. வங்கிக் கடன்கள் பொதுவாக வலுவான பின்புல இணைப்புகள் அல்லது நற்பெயரைக் கொண்டவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்பதால், பலருக்கு வங்கிக் கடன் என்பது எட்டாக்கனியாகவே இருந்தது. குறிப்பாக பின்தங்கிய பின்னணியில் இருந்து, வந்தவர்கள் நிதி அமைப்பிலிருந்து விலக்கப்பட்டனர். இதன் விளைவாக, பல தனிநபர்கள் கந்து வட்டிக்காரர்களின் கடன் சுழலில் சிக்கிக் கொண்டனர்.

இருப்பினும், பிரதமரின் முத்ரா திட்டத்தின் அறிமுகம் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. இந்தத் திட்டம் சிறு வணிக உரிமையாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு நிதி உதவி வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தேவைப்படுபவர்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு, எந்தவித பாரபட்சமும் இல்லாமல், 20 லட்சம் ரூபாய் வரை கடன்களை வழங்குகிறது, இந்தத் திட்டம் இந்தத் தொழில்முனைவோருக்கு அதிகாரம் அளிப்பது மற்றும் அவர்களின் தொழில்களை வளர்க்க உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சமுதாயத்தில் பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் அதிகாரமளிக்கப்படும் போதுதான், சமுதாயம் முன்னேறுகிறது. முத்ரா கடன்களை பெண்களுக்கு வழங்கியதன் மூலம், கோடிக்கணக்கான பெண்களுக்கு தொழில் நடத்தும் வசதி அளிக்கப்பட்டுள்ளது.
- முத்ரா திட்டம், நிமிர்ந்து நில் இந்தியா ஆகியவற்றின் கீழ் முறையே, அரசு 68% மற்றும் 82% -க்கும் அதிகமான பெண் தொழில்முனைவோருக்கு ஆதரவு அளித்துள்ளது.

பிரதமரின் முத்ரா திட்டம் மக்கள் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது, அவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்க உழைத்தால், அவர்களுக்கு ஆதரவளிக்க அரசு தயாராக உள்ளது என்பதை இத்திட்டம் காட்டுகிறது. விவசாயத்திற்கு அடுத்தபடியாக கணிசமான வேலைவாய்ப்பை உருவாக்கும் சிறு வணிகங்களை ஆதரிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் இந்த முயற்சி முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ், கடைக்காரர்கள், காய்கறி விற்பனையாளர்கள், லாரி ஓட்டுநர்கள், சிறு தொழில்



உரிமையாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் உட்பட பலதரப்பட்ட தொழில்முனைவோர் இப்போது மிகவும் தேவையான நிதி ஆதாரங்களைப் பெற முடியும். இது பலருக்கு பொருளாதார மற்றும் சமூக உள்ளடக்கத்தை அதிகரிக்கும் கருவியாக உள்ளது.

### சிறு வணிகர்களுக்கு நிதி உதவி

நாடு முழுவதும் உள்ள சிறு தொழில்கள் மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் முத்ரா திட்டம் 2015-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. சொந்தமாகத் தொழில் தொடங்கும் தனிநபர்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்குவதும், சிறு நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதும் இதன் முதன்மை நோக்கமாகும். ஆரம்பத்தில், ஷிஷு, கிஷோர் மற்றும் தருண் ஆகிய மூன்று பிரிவுகளில் கடன்கள் வழங்கப்பட்டன. இப்போது அதன் வெற்றியைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு தனது மூன்றாவது ஆட்சி காலத்தின் முதல் பொது பட்ஜெட்டில், அதாவது, 2024-ம் ஆண்டு ஜூலை மாதம் தாக்கல் செய்யப்பட்ட பொது பட்ஜெட்டில் தருண் பிளஸ் என்னும் மற்றொரு புதிய வகையைச் சேர்த்துள்ளது, தருண் பிரிவின் கீழ் கடன் பெற்று அதை திருப்பிச் செலுத்திய விண்ணப்பதாரர்களுக்கு, இந்தப் புதிய பிரிவில், இந்தத் தொகை 10 லட்சம் ரூபாயிலிருந்து.20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

முத்ரா திட்டத்தின் கீழ், புதிய தொழில் தொடங்க விரும்பும் இந்திய குடிமகன் 10 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி தேவைப்படும், முத்ரா கடன்களை வழங்கும் எந்த வங்கி அல்லது வங்கி அல்லாத நிதி நிறுவனம் மூலமாகவும் கடனுக்கு விண்ணப்பிக்கலாம். அதிகாரப்பூர்வ முத்ரா இணையதளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் கடன் விண்ணப்பத்தை நேரடியாக சமர்ப்பிக்கலாம் அல்லது முத்ரா இணையதளம் வழியாக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.


முத்ரா திட்டத்தின் அடிப்படையே நாட்டு மக்கள் மீது நம்பிக்கை வைப்பதுதான், ஏனெனில் நாடு அவர்கள் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளது. இந்த முன்முயற்சிக்கு நாட்டின் வங்கிகளின் வலையமைப்பு, வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மூலம் மேலும் ஆதரவு அளிக்கிறது.

## ஷைலேஷ் தூய்மைக்கு பங்களித்து வருகிறார்


*மும்பை ஐரோலியில் வசிக்கும் ஷைலேஷ் போசலே, முத்ரா திட்டம் மூலம் தனது கனவை நிறைவேற்றியதுடன் மட்டுமல்லாமல், தனது புதிய சிந்தனையுடன் தூய்மை இந்தியா இயக்கத்துக்கும் பங்களித்து வருகிறார். பிரதமர் நரேந்திர மோடியின் தூய்மை இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டதைக் கேள்விப்பட்ட ஷைலேஷ், இந்த மாபெரும் இயக்கத்தில் சேர விரும்பினார். ஷைலேஷ் குடியிருந்த இடத்தில் கழிவுநீர் பிரச்னை ஏற்பட்டது. அதில் தன்னார்வத் தொண்டராக சேருவதற்குப் பதிலாக, ஷைலேஷ் ஒரு புதிய யோசனையை செயல்படுத்த நினைத்தார். அவர் ஒரு முன்மொழிவுடன் வங்கியை அணுகினார். வங்கி அவரது முயற்சியைப் பாராட்டி, முத்ரா திட்டத்தின் கீழ் அவருக்கு 8.57 லட்சம் ரூபாயைக் கடனாக வழங்கியது. ஷைலேஷ் இந்தத் தொகையில் ஒரு டேங்கர், ஒரு உறிஞ்சும் பம்ப் மற்றும் பிற உபகரணங்களை வாங்கினார். இன்று, இந்தப் பிரிவின் மூலம், ஷைலேஷ் தூய்மைக்கு பங்களிப்பது மட்டுமல்லாமல், நாட்டிற்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை தனது வாழ்வாதாரத்துடன் இணைத்து நல்ல வருமானத்தையும் ஈட்டி வருகிறார்.*

## சமூகம்: பிரிவு வாரியாக பயன்கள்

கடன் தொகை




கடன்களின் எண்ணிக்கை





*28.02.2025 வரையிலான தரவு*




## புதிய தொழில்முனைவோருக்கு பெரும் ஆதரவு

புதிய தொழில்முனைவோர்/ கடன் பகிர்வு எண்ணிக்கை




புதிய தொழில்முனைவோர்/ கடன் தொகை பகிர்வு




*28.02.2025 வரையிலான தரவு*



**ஒரு தசாப்தத்துக்கு முன்பு, இளைஞர்களுக்கு முத்ரா போன்ற திட்டம் இருந்திருந்தால், நகரங்களை நோக்கி புலம் பெயர்ந்து செல்லும் பிரச்சனை இவ்வளவு கடுமையாக இருந்திருக்காது. வங்கி உத்தரவாதமின்றி, குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறுவதன் மூலம், இளைஞர்கள் அவர்களது நகரத்திலோ அல்லது கிராமத்திலோ வேலைவாய்ப்பை சொந்தமாகவே உருவாக்க முடியும். இன்று, பரம ஏழைகள் கூட எந்தவித உத்தரவாதமும் இன்றி, முத்ரா கடன்களைப் பெற்று வருகின்றனர். ஒரு சாதாரண மனிதன் கூட, முத்ரா திட்டத்தின் உதவியுடன், ஒரு தொழில்முனைவோராக மாற முடியும்.**

**- நரேந்திர மோடி, பிரதமர்**

- கடன் பெற தகுதி பெற்ற சிறு வர்த்தகம் தொடங்க திட்டம் வைத்துள்ள எந்த நபரும் பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் கடன் பெறலாம்.
- உற்பத்தியில் வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகள், மற்றும் கோழிப்பண்ணை, பால் பண்ணை, தேனீ வளர்ப்பு, உள்ளிட்ட விவசாயம் சார்ந்த செயல்பாடுகள் கடைக்காரர்கள், பழம் மற்றும் காய்கறி வியாபாரிகள், சரக்கு வாகன ஓட்டுநர்கள், சிறு தொழில் கைவினைஞர்கள் மற்றும் இதர பிரிவினர் உட்பட சேவை துறையை சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்


## முத்ராவிலிருந்து வலுவான ஆதரவு



முத்ரா திட்டத்தின் மூலம் கனவுகளை நனவாக்கிய கோடிக்கணக்கான குடும்பங்களில் பீகாரின் தலைநகரான பாட்னாவைச் சேர்ந்த ரூபி தேவியும் ஒருவர். பெயிண்டரான ரூபியின் கணவருக்கு சரியாக வேலை கிடைக்காததால், குடும்பம் நடத்துவது கடினமாக இருந்தது. அத்தகைய சூழ்நிலையில், ரூபி முத்ரா திட்டம் பற்றிக் கேள்விப்பட்டார். அவரது பெயரில் கடன் வாங்க முடிவு செய்தார். அந்த நிதியைக் கொண்டு அவரது மாமனார் பெரிய பாத்திரங்களை வாங்கி ஒரு சிலரை வேலைக்கு அமர்த்தினார். அவர் திருமணங்கள் மற்றும் பிற நிகழ்வுகளுக்கு உணவு சமைக்கும் கேட்டரிங் சேவைகளை வழங்குகிறார். காலப்போக்கில், குடும்பத்தின் வருமானம் சீராக வளர்ந்தது. ரூபியின் குழந்தைகள் இப்போது நல்ல பள்ளியில் படிக்கிறார்கள்

## முத்ரா கடன்களின் எண்ணிக்கை & தொகை (2015 ஏப்ரல் 8 முதல் 2025 பிப்ரவரி 28 வரை)

கடன்களின் எண்ணிக்கை | தொகை கோடியில்




**மொத்த கடன் எண்ணிக்கை 52.07 கோடி** | **மொத்த தொகை 33.19 லட்சம் கோடி ரூபாய்**

நாடு முழுவதிலும் உள்ள வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் (என்பிஎஃப்சி) மற்றும் நுண் நிதி நிறுவனங்கள் (எம்எஃப்ஐ). வறுமையை எதிர்த்துப் போரிடுவதற்கும், மக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் ஒரு பெரிய அளவிலான இயக்கத்தை உருவாக்கவும் ஒன்றிணைந்துள்ளன.

இந்த இடைத்தரகர்களுக்கு முத்ரா நிதி நிறுவனம் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்பட்டது. இதனால் அவர்களும் குறைந்த வட்டி விகிதத்தில் மக்களுக்கு கடன் வழங்க முடியும். இதற்காக, மூன்று பிரிவுகள் (தற்போது நான்கு) முடிவு செய்யப்பட்டன.

இதனுடன், முத்ரா கடனைத் தவிர இடையில் கூடுதலாகத்

- **பல வங்கிகளும், நிதி நிறுவனங்களும், கடன் விண்ணப்பங்களுக்கு ஆன்லைன் தளங்கள் மற்றும் மொபைல் செயலிகளை அறிமுகம் செய்துள்ளன. இது, காகிதப் பயன்பாட்டின் அவசியத்தையும், கிளைக்கு நேரடியாகச் செல்வதையும் குறைத்துள்ளது.**

Tuesday March 4, 2025 16:53 PM हिन्दी A- A A+

LOGIN FOR PMMY PORTAL

# முத்ரா கடனுக்கான விண்ணப்ப நடைமுறையைப் புரிந்துகொள்வோம்

முத்ரா கடன் பெறுவதற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க, நீங்கள் முதலில் *https://www.mudra.org.in* என்ற இணையதள முகவரிக்குச் செல்ல வேண்டும். அங்கிருந்து விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்ய வேண்டும். நீங்கள் கடன் பெற விரும்பும் வகையைக் குறிப்பிடுவதன் மூலம் படிவத்தை பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்களுடன் வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும்.

### விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன் தயாராக இருக்க வேண்டிய ஆவணங்கள்

- விண்ணப்பதாரரின் அடையாளச் சான்று
- முகவரிச் சான்று
- பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
- விண்ணப்பதாரரின் கையொப்பம்
- வர்த்தகச் சான்று, பொருத்தமான இடங்களில்

### பதிவு செய்வதற்கான படிப்படியான செயல்முறைகள்

| படி 1 | படி 2 | படி 3 | படி 4 |
|---|---|---|---|
| ஜன் சமர்த் இணையதள பக்கத்திற்கான அதிகாரப்பூர்வ வலைத்தளமான mudra.org.in என்ற இணையதள முகவரிக்குச் செல்லவும் அல்லது அருகிலுள்ள ஏதேனும் ஒரு வங்கியின் கிளைக்குச் செல்லவும் | முத்ரா கடன் "இப்போது விண்ணப்பிக்கவும்" என்பதை தேர்வு செய்யவும் | பின்வரும் புதிய தொழில்முனைவோர் / ஏற்கனவே உள்ள தொழில்முனைவோர் / சுயதொழில் செய்பவர் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்து செய்யவும் | விண்ணப்பதாரரின் பெயர், மின்னஞ்சல் முகவரி, அலைபேசி எண் போன்ற விபரங்களை பூர்த்தி செய்து, ஒரு முறை பயன்பாடு கொண்ட கடவுச்சொல்லை உருவாக்கவும். |

### பதிவு செய்த பின்பு

- **படி 1:** தனிப்பட்ட விவரங்கள் மற்றும் வர்த்தக விவரங்களை பூர்த்தி செய்யவும்
- **படி 2:** திட்ட முன்மொழிவைத் தயார் செய்வதற்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் அதற்கு ஆதரவு அளிக்கும் நிறுவனங்களைத் தேர்வு செய்யவும்; தேவையில்லையெனில், "கடன் விண்ணப்ப மையத்தைக் கிளிக் செய்க"
- **படி 3:** தேவையான கடன் வகையைத் தெரிவு செய்யவும் - முத்ரா சிஷு / முத்ரா கிஷோர் / முத்ரா தருண் / தருண் பிளஸ்
- **படி 4:** வர்த்தக நிறுவனத்தின் பெயர், வர்த்தக செயல்பாடு போன்றவற்றை உள்ளீடு செய்து, உற்பத்தி, சேவை, வர்த்தகம் அல்லது விவசாயம் சார்ந்த பணிகள் போன்ற தொழில்துறையின் வகையைத் தேர்ந்தெடுக்கவும்.
- **படி 5:** உரிமையாளர் விவரங்கள் தற்போதைய வங்கிக்கணக்கு, மற்றும் கடன் வசதிகள், முன்மொழியப்பட்ட கடன் வசதிகள், எதிர்கால வர்த்தக மதிப்பீடுகள் மற்றும் விரும்பும் கடன் வழங்குநர் போன்ற பிற விவரங்களை உள்ளீடு செய்யவும்.
- **படி 6:** அடையாளச் சான்று, விண்ணப்பதாரரின் புகைப்படம், விண்ணப்பதாரரின் கையொப்பம், வர்த்தக நிறுவனத்தின் அடையாளச் சான்று / முகவரி போன்ற தேவையான அனைத்து ஆவணங்களையும் இணைக்கவும்.
- **படி 7:** விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு, விண்ணப்ப எண் ஒன்று உருவாக்கப்படுகிறது. இது எதிர்கால குறிப்புக்காக வைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

## விண்ணப்பத்தை எளிதாக்குவதற்கான அரசின் நடவடிக்கைகள்

பிரதமரின் முத்ரா திட்டத்தை திறம்பட செயல்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. விளம்பர பிரச்சாரங்கள், எளிதான விண்ணப்பபடிவம், கடன் உத்தரவாதத் திட்டம், முத்ரா நோடல் அதிகாரியை நியமனம் செய்து கொள்ளுதல், விண்ணப்பதாரரின் தரவுகள் டிஜிட்டல் மதிப்பீட்டின் அடிப்படையிலான ஒப்புதலுடன் விரைவான மற்றும் பயனுள்ள கடன் வழங்கலுக்கான ஜன் சமர்த் இணையதள வசதிகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

### பிரதமரின் முத்ரா கடன் பெறுவதற்குத் தகுதியான விண்ணப்பதாரர்கள்

- தனிநபர்கள், தனிநபர் உரிமையாளர் நிறுவனங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவை பிரதமரின் முத்ரா கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர். விண்ணப்பதாரர் எந்தவொரு வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் பெற்ற கடனை திரும்பிச் செலுத்த தவறியவராக இருத்தல் கூடாது. அவரது கடன் பரிவர்த்தனை மதிப்பீடுகள் திருப்திகரமாக இருக்க வேண்டும்.

தேவைப்படும் பணத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு முத்ரா அட்டை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக கடன் பெற்றவர்கள் கடன் வழங்கும் தனி நபர்களிடம் செல்ல வேண்டியதில்லை. இந்த அட்டையை அவசர காலங்களில் பயன்படுத்திக் கொள்ள முடியும். முத்ரா அட்டை என்பது கடன் வழங்கும் ஒரு புதுமையான முன்முயற்சியாகும். இதன் வாயிலாக கடன் பெறுபவர் எவ்வித இடையூறும் இன்றி அவர்களது வசதிக்கேற்ப கடனைப் பெற முடியும். இது கடன் பெறுபவர்களுக்கு கூடுதல் தாற்காலிக கடன் தொகையைப் பெறுவதற்கான வசதியை வழங்குகிறது. முத்ரா அட்டை ஒரு

## புதிய நான்காவது வகைப்பாட்டில் தற்போது 20 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும் கடன் தொகை

வேலை தேடும் நபராக இல்லாமல் வேலைவாய்ப்பை உருவாக்கும் நபராக மாறுவதற்கான மூலதனத் தடையை மத்திய அரசு அகற்றி வருகிறது. முன்பு முத்ரா திட்டத்தின் கீழ், ஷிஷு, கிஷோர், தருண் ஆகிய 3 கடன் பிரிவுகளில், அந்தந்த கடன் உச்ச வரம்புடன் கடன் வழங்குவதற்கான நடைமுறைகள் தொடங்கப்பட்டன. தருண் பிரிவில் அதிகபட்ச கடன் தொகையாக 10 லட்சம் ரூபாய் வரை வழங்கப்பட்டுள்ளது. 2024-25 - ம் நிதியாண்டு முதல், இந்தத் திட்டத்தில் தருண் பிளஸ் என்ற புதிய பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இதில் முன்பு தருண் பிரிவின் கீழ் கடன் பெற்று முறையாக திரும்பிச் செலுத்தியுள்ள தொழில்முனைவோர்களுக்கு 20 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படும். குறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதியத்தின் கீழ் வரும் நிறுவனங்களுக்கு இந்த வகைக் கடன் பிரிவுகள் பொருந்தும். இது சிறு வர்த்தக நிறுவனங்கள் நிதியுதவி பெறுவதை எளிதாக்கும். தற்போது முத்ரா கடன்கள் நான்கு பிரிவுகளாக வழங்கப்படுகின்றன.

**சிஷு கடன்: 50, 000 ரூபாய் வரை**

**கிஷோர் கடன்: 50, 000 முதல் 5 லட்சம் ரூபாய் வரை**

**தருண்: 5 லட்சம் ரூபாய் முதல் ரூ.10 லட்சம் வரை**

**தருண் பிளஸ்: 10 லட்சம் முதல் 20 லட்சம் ரூபாய் வரை**

- முத்ரா கடன் பெறுவதற்கு உத்தரவாதம் எதுவும் தேவையில்லை. கடன் தொடர்பான அனைத்து அம்சங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் இந்திய ரிசர்வ் வங்கியால் தளர்த்தப்பட்டுள்ளன. மேலும் அவை இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் நெறிமுறைகளுக்கு உட்பட்டு அந்தந்த வங்கிகளின் கடன் கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகின்றன. பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதம் நிதி செலவு, இடர் மதிப்பீடு, கடன் தொகையைத் திரும்பிச் செலுத்துவதற்கான கால வரையறை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது.
- ஆர்வமுள்ள இளைஞர்களிடையே தொழில்முனைவோர் திறனை மேம்படுத்த ஷிஷு கடனுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## பல்வேறு நன்மைகள்

- முத்ரா ரூபே பற்று அட்டை மூலம் கடன் பெறுபவருக்கு எந்த இடையூறும் இல்லாமல் வசதிக்கேற்ப கடன் தொகையைப் பெற வகை செய்கிறது.
- இந்த பற்று அட்டையின் மூலம், கடன் பெறும் நபர் தற்காலிக கூடுதல் கடன் தொகைக்கான வசதியைப் பெறுகிறார். இது செயல்பாட்டு மூலதனத் தேவையை எளிதாக்குகிறது.
- முத்ரா கடன் அட்டை ஏடிஎம் வாயிலாக பணம் எடுக்கவோ அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நபர்களிடமிருந்து பணத்தை பெறுவதற்கோ அல்லது விற்பனை கருவி இயந்திரம் மூலமாகவோ பணத்தைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படலாம்.
- கடன் பெற்றவரிடம் கூடுதல் தொகை இருந்தால், இதன் மூலம் கடன் தொகையை திருப்பிச் செலுத்தலாம். இதன் மூலம், தொழில்முனைவோரின் வட்டி செலவு குறையும்.



### முத்ரா கடன் திட்டத்தின் மூலம் மூன்று ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள்

பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு உருவாக்கத்தின் எண்ணிக்கை குறித்து கண்டறிய மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தேசிய அளவிலான கணக்கெடுப்பை நடத்தியது. இந்த கணக்கெடுப்பு முடிவுகளின்படி, இந்தத் திட்டம் 2015 -ம் ஆண்டு முதல் 2018 - ம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளில் 1.12 கோடி கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவியுள்ளது. புதிய திட்டத்தின் கீழ் இந்த நிறுவனங்கள் சிறு வர்த்தகர்களிடம் சென்று அவர்களை அடையாளம் காண வேண்டியிருந்தது.



ரூபே பற்று அட்டை என்பதால், ஏடிஎம் இயந்திரம் அல்லது வர்த்தகத் தொடர்பிலிருந்து அல்லது விற்பனை எந்திரத்தின் வாயிலாகவோ பணத்தை பெறுவதற்கு இதனைப் பயன்படுத்தலாம். உபரியாக ரொக்கப் பணம் கிடைக்கும் போதெல்லாம் கடன் தொகையை திருப்பிச் செலுத்தும் வசதியும் இதில் உள்ளதால் வட்டி செலவை அது குறைக்கிறது.

### வேலை தேடுபவர்கள் அல்ல, வேலைவாய்ப்பை உருவாக்குபவர்கள்

முத்ரா திட்டம் பிரதமர் நரேந்திர மோடியின் மனதிற்கு நெருக்கமான திட்டமாகும். ஏனெனில், இந்தத் திட்டத்தின்







## உங்களது அனைத்து கேள்விகளுக்குமான பதில்கள்

- **பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ், கடன் பெறுவதற்கு காதி விற்பனை தொடர்பான செயல்பாடுகள் தகுதியானவையா?**
- ஆம். வருமானத்தை உருவாக்கும் எந்தவொரு செயல்பாட்டிற்கும் முத்ரா கடன்கள் கிடைக்கின்றன. ஜவுளித் துறையின் கீழ் தகுதியான நடவடிக்கைகளில் காதி விற்பனை செயல்பாடுகளும் ஒன்றாகும். வருமானத்தை ஈட்டுவதற்காக முத்ரா கடன் பெறப்பட்டிருந்தால், அப்போது இதற்கும் கடன் திட்டம் பொருந்தும்.

- **சின்ஜி டெம்போ / டாக்ஸி வாகனங்கள் வாங்குவதற்கு முத்ரா கடன்கள் கிடைக்கின்றனவா?**
- விண்ணப்பதாரர் வர்த்தகப் பயன்பாடுகளுக்காக வாகனங்களைப் பயன்படுத்த விரும்பினால், சின்ஜி டெம்போ / டாக்ஸி வாகனங்கள் வாங்குவதற்கு முத்ரா கடன் கிடைக்கும்.

- **வங்கியில் எனக்கு ஒரு சேமிப்புக் கணக்கு உள்ளது. முத்ரா திட்டத்தின் கீழ் கடன்கள் கிடைக்குமா?**
- ஆம். இதற்காக விண்ணப்பதாரர் வங்கி கிளையை அணுகலாம். கடன் வழங்கும் உறுப்பு நிறுவனங்களில் கடனுக்கு விண்ணப்பிக்க வேண்டும். கடன் தொடர்பான விதிமுறைகள், நிபந்தனைகள் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், கடன் வழங்கும் நிறுவனத்தின் கொள்கைகளை சார்ந்து இருக்கும். முன்மொழியப்பட்ட வருமானத்தை உருவாக்கும் செயல்பாட்டின் தேவைக்கேற்ப கடன் தொகை தீர்மானிக்கப்படும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான விதிமுறைகள் பணப்புழக்கம் தொடர்பான செயல்பாட்டிலிருந்து தீர்மானிக்கப்படும்.

- **பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் – ஷிஷு கடன் பிரிவில், கடன் பெறுவதற்கான விண்ணப்பம் மீதான செயலாக்கத்தின் காலம் எவ்வளவு?**
- இந்திய ரிசர்வ் வங்கியால் அமைக்கப்பட்ட வங்கி விதிமுறைகள் மற்றும் தர நிர்ணய வாரியத்தின் படி, 5 லட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்கு 2 வார காலத்திற்குள் ஒப்புதல் அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும்.

- **பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபாய் வரையிலான கடனைப் பெறுவதற்கு முந்தைய 2 ஆண்டுகளாக தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி படிவத்தை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமா?**
- இந்த திட்டத்தின் கீழ், பொதுவாக சிறிய அளவிலான கடன்களுக்கு வருமான வரி படிவத்தை தாக்கல் செய்ய வலியுறுத்தப்படுவதில்லை. இருப்பினும், சம்பந்தப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்கள் தங்களது நிறுவனத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பது குறித்த ஆலோசனை வழங்கும்.

- **பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு உதவிடும் முகமை ஏதேனும் உள்ளதா?**
- இல்லை. முத்ரா திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு முகமையோ அல்லது இடைத்தரகர்களோ நியமிக்கப்படவில்லை. பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ், கடன் பெறுவது தொடர்பாக முகமைகள் அல்லது இடைத்தரகர்களிடமிருந்து விலகி இருக்குமாறு கடனாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாயிலாக பயனடையும் கர்ம யோகிகள், தொழில்முனைவோர் இளைஞர்கள் மற்றும் பெண்கள். இன்று, நாட்டின் வளமைக்கும், சமூகத்தின் நல்வாழ்விற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றனர். இந்தத் திட்டம் இளைஞர்களை வேலை தேடுபவர்களாக இல்லாமல் வேலைவாய்ப்பை உருவாக்குபவர்களாக மாறுவதற்கு உதவிடுகிறது. "எனது இல்லத்தில் முத்ரா திட்டத்தின் பயனாளிகளுடன் சிறிது நேரம் செலவிட எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அவர்களின் அனுபவங்கள், அவர்களின் போராட்டங்கள் மற்றும் அவர்களின் முன்னேற்றம் குறித்த கதைகள் திருப்தியை அளிக்கின்றன. மேலும் அவை மனதை பெருமை கொள்ளச் செய்கின்றன" என்று பிரதமர் மோடி கூறினார்.

ஏழைமக்கள் மற்றும் அவர்களது கனவுகள் மீதான மத்திய அரசின் நம்பிக்கையும், அவர்களது கடின உழைப்பின் மீதான நம்பிக்கையும் இன்று இந்தத் திட்டத்தின் அடித்தளமாக உள்ளது. முத்ரா திட்டத்தின் வெற்றியைக் காணும் போது, இது போன்ற திட்டம் இளைஞர்களுக்கு பல தசாப்தங்களுக்கு முன்னதாகக் கிடைத்திருந்தால், நகர்ப்புறங்களை நோக்கி அவர்களை இடம்பெயரச் செய்வது போன்ற கடுமையான பிரச்சனை ஏற்பட்டிருக்காது என்று பிரதமர் வலியுறுத்தினார்.

இளைஞர்கள் வங்கி உத்தரவாதம் எதுவுமின்றி கடன் பெற்றிருந்தால், அவர்கள் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெற்றிருந்தால், அவர்கள் தங்கள் வசிக்கும் கிராமங்கள் அல்லது நகர்ப்புறப் பகுதிகளில் வேலைவாய்ப்புக்களை

உருவாக்கியிருப்பார்கள். இன்று, மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்கள், எவ்வித உத்தரவாதமும் இன்றி முத்ரா கடன்களைப் பெறுகின்றனர். சாமானிய மனிதனும் முத்ரா கடனுதவியுடன் ஒரு தொழில்முனைவோராக உருவெடுக்க முடியும். நாட்டில் எப்போதும் திறமைகளுக்கு பஞ்சம் இருந்ததில்லை. ஒருவர் அவர் எந்த பகுதியைச் சேர்ந்தவர் அல்லது எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பதைப் பொருட்படுத்தாமல் அவரவர்களுக்கென்று சில சிறப்புத் திறமைகள் உள்ளன. எனவே, நாட்டில் திறமைகளை அங்கீகரித்து ஊக்குவிக்க வேண்டிய அவசியம் உள்ளது. முத்ரா கடன் திட்டம் மக்களின், குறிப்பாக இளைஞர்களின் இந்த திறமைகளை வலுப்படுத்துவதாக உள்ளது. திறமைகள் முறையாக ஊக்குவிக்கப்படும்போது, அது மேலும் மலர்ந்து வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வருகிறது.

பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ், முதல் முறையாக சொந்த தொழிலைத் தொடங்கியுள்ளவர்கள் அல்லது முதல் முறையாக முத்ரா கடனை பெற விண்ணப்பித்தவர்களுக்கு 20 சதவீதத்திற்கும் கூடுதலான எண்ணிக்கையில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் வேலைவாய்ப்பில்லாமல் இருந்த இவர்கள் தற்போது வேலைவாய்ப்பை உருவாக்குபவர்களாக உருவெடுத்து வருகின்றனர். இது மட்டுமின்றி, சுமார் 68 சதவீத கடன்கள் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒரு பெண் முன்னேறிச் செல்லும்போது, பொருளாதார நடவடிக்கைகளின் மையமாக மாறும்போது, முழு குடும்பத்தின் மீதும் அவர்களுக்கான நம்பிக்கை அதிகரிப்பதுடன், அவர்களின் சிந்தனையும் மாற்றம் பெறுவதுடன். சமூகமும் அதிகாரம் பெறுகிறது. முத்ரா திட்டம் பெண்களின் பொருளாதார சக்தியையும், சமூகம் சார்ந்த முடிவுகளில் அவர்களின் பங்கேற்பையும் அதிகரித்துள்ளது. இதேபோல், முத்ரா திட்டத்தின் கீழ் 50 சதவீதத்திற்கும் அதிகமான கடன்கள் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நிதிசார் உள்ளடக்கத்திற்கு முத்ரா திட்டம் ஒரு சிறந்த உதாரணமாக உள்ளது. முத்ரா திட்டம் மூலம், ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வர்த்தக நிறுவனங்களைத் தொடங்கி ஒரு வலுவான தளத்தை வழங்குவதற்கான கனவை நனவாக்குகிறது. இந்தத் திட்டத்தின் அமலாக்கம் நாடு முழுவதும் உள்ள குடும்பங்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தியுள்ளது. அவர்களால் தங்களது குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்க முடியும். மேலும், இது பிறருக்கு பல்வேறு வேலை வாய்ப்புகளையும் வழங்க வகை செய்கிறது. இது சமூகத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகப்பெரிய நிதிசார் உள்ளடக்க நடவடிக்கையாகும்.

பல தசாப்தங்களாக, வறுமையை எதிர்த்துப் போரிடுவதிலும், ஏழைகளின் மேம்பாட்டிற்காக வாதிடுவதிலும் கவனம் செலுத்தி வந்த ஏராளமான கோஷங்களை இந்தியா கண்டுள்ளது. இருப்பினும், முத்ரா திட்டம் எந்தவொரு பாகுபாடும் இன்றி பொருளாதார, சமூக ஆதரவை வழங்குவதன் மூலம் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் உண்மையாக செயல்படும் திட்டமாக தனித்து நிற்கிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு, பிரதமர் நரேந்திர மோடியால்



## சராசரி கடன் தேவைகள்








> “திறமைக்கு உத்வேகம் கிடைக்கும்போது, அது மேலும் பிரகாசிப்பதுடன், வாழ்க்கை தரத்தையும் மாற்றுகிறது. எம்பிராய்டரி தொழில் செய்யும் திறமை கொண்ட ஒருவர், முத்ரா கடன் பெற்று எம்பிராய்டரி தொழிலைத் தொடங்கினார். சிலர் கைத்தறித் தொழிலைத் தொடங்குவதற்கான கடனுதவி பெற்றுள்ளனர். ஒரு வகையில், நாட்டின் சாமானிய மக்களின் திறமையை மேம்படுத்துவதற்கும், மக்களுக்கு அதிகாரமளிப்பதற்கும் முத்ரா திட்டம் பணியாற்றியுள்ளது.”
>
> **– நரேந்திர மோடி, பிரதமர்**

தொடங்கி வைக்கப்பட்ட பிரதமரின் முத்ரா திட்டம், இதன் மூலம் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறு மற்றும் நிறுவனம் அல்லாத நபர்கள், விவசாயம் அல்லாத தொழில்முனைவோருக்கு 10 லட்சம் ரூபாய் வரை பிணையில்லாத சிறிய அளவிலான கடனுதவியை எளிதாக கிடைக்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகை தற்போது 20 லட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2025 - ம் ஆண்டு பிப்ரவரி மாத நிலவரப்படி, இத்திட்டத்தின் கீழ் 52 கோடிக்கும் மேற்பட்ட கடன்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நாடு முழுவதிலும் உள்ள மிகச்சிறிய தொழில்முனைவோருக்கு பிணையில்லாத கடன்களுக்கான நடைமுறைகளை எளிதாக்கியுள்ளது. இந்த முன்முயற்சியை ஊக்குவிப்பதில் மத்திய அரசு கவனம் செலுத்தியதன் காரணமாக, லட்சக்கணக்கான குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (எம்எஸ்எம்இ),முறையான பொருளாதார நடைமுறைகளின் கீழ் கொண்டுவரப்பட்டு, அதிக வட்டிக்கு கடன் வழங்கும் நபர்களிடமிருந்து வெளியேறுவதற்கு அனுமதி வழங்குகிறது. வளர்ந்து வரும் தொழில்முனைவோருக்கு எளிதில் கடனுதவி கிடைப்பதுடன், அவற்றில் புதுமைகளை ஊக்குவித்து, தனிநபர் வருமானத்தில் நிலையான வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

பிரதமரின் முத்ரா திட்டம் இந்தியாவில் தொழில்முனைவோரின் சூழல் அமைப்பை முற்றிலும் மாற்றியமைத்துள்ளதுடன், இது நிதி மற்றும் சமூக உள்ளடக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளது. இந்தத் திட்டம் எண்ணற்ற புதிய தொழில்முனைவோருக்கு தங்களது சுயதொழில் குறித்த கனவுகளை நனவாக்க உதவியுள்ளது. பல ஆண்டுகளாக, இத்தகைய திட்டங்கள் பெண்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு அதிகாரமளித்து, பொருளாதார மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை உருவாக்கி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான சூழலை வளர்த்துள்ளன. கடன் தொகைக்கான உச்சவரம்பு 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ள நிலையில், சிறு வர்த்தக நிறுவனங்களை வளர்ப்பதிலும், நாட்டை சம நிலையுடன் வளமான எதிர்காலத்தை நோக்கி முன்னேற்றம் அடையச் செய்வதிலும் முத்ரா திட்டம் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது.

நிமிர்ந்து நில் இந்தியா திட்டத்தின் ஒன்பது ஆண்டுகள்

# எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கும் பெண் தொழில்முனைவோருக்கும் வலுவான ஆதரவு

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகு, 2014-ம் ஆண்டு வரை, நாட்டின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பாதி பேர் வங்கி சேவைகள் கிடைக்காமல், அந்தச் சேவை முறைக்கு வெளியிலேயே இருந்து வந்தனர். அந்த நிலை மாறி, தற்போது 55 கோடி ஜன்தன் வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பை உருவாக்குபவர்களாக இளைஞர்களை மாற்றும் நோக்கில் உத்தரவாதம் இல்லாத கடன்களை வழங்கும் திட்டங்களும் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு பகுதியாக நிமிர்ந்து நில் இந்தியா திட்டம், 2016-ம் ஆண்டு ஏப்ரல் 5-ம் தேதியன்று தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் வெற்றியைப் புள்ளிவிவரங்கள் எடுத்துக் கூறுகின்றன. ஒன்பது ஆண்டுகளுக்குள், நிமிர்ந்து நில் இந்தியா திட்டத்தில் எஸ்சி, எஸ்டி சமூகத்தினருக்கும் அனைத்து பிரிவுகளைச் சேர்ந்த பெண் தொழில்முனைவோருக்கும் என மொத்தம் 2.67 லட்சம் விண்ணப்பதாரர்களுக்கு, 60 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் வழங்கப்பட்டு, அதன் மூலம் அவர்களுக்குப் புதிய ஆதரவு அளிக்கப்பட்டுள்ளது.

அரசின் நிமிர்ந்து நில் இந்தியா திட்டம் பிரதமர் நரேந்திர மோடியின் சிந்தனையின் விளைவாக உருவானது. புதிய தொழில்முனைவோரிடையேயும் இளைஞர்களிடையேயும் சுய வேலைவாய்ப்புடன் தொழில்முனைவோர் உணர்வுக்கான பொருளாதார வலிமையை அளிப்பதே பிரதமரின் முக்கிய நோக்கமாகும். நிமிர்ந்து நில் இந்தியா திட்டம், குறிப்பாக எஸ்சி பிரிவினர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோரை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்சார்பு இந்தியா என்ற உறுதிப்பாட்டை அடைவதற்கான வலுவான இணைப்பாக இது உருவெடுத்துள்ளது. நிமிர்ந்து நில் இந்தியா திட்டத்தின் கீழ், இதுவரை 82 சதவீதத்துக்கும் அதிகமான கடன்கள் பெண் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 10 லட்சம் ரூபாய் முதல் 1 கோடி ரூபாய் வரையிலான கடன்கள்

நிமிர்ந்து நில் இந்தியாவின் நோக்கம், உற்பத்தி, சேவை, வர்த்தகம், விவசாயம் தொடர்பான துறைகளில் பசுமை தொழில் நிறுவனங்களை அமைப்பதற்காக ஒவ்வொரு வங்கிக் கிளையிலும் குறைந்தபட்சம் ஒரு எஸ்சி அல்லது பழங்குடியின விண்ணப்பதாரருக்கும், ஒரு பெண் விண்ணப்பதாரருக்கும், 10 லட்சம் ரூபாய் முதல் 1 கோடி ரூபாய் வரை கடன் வழங்குவதாகும். பசுமைத் தொழில் நிறுவனங்கள் (கிரீன்ஃபீல்ட் எண்டர்பிரைசஸ்) என்பது ஒரு புதிய பொருளை உருவாக்க அல்லது ஒரு புதிய சேவையை வழங்க அல்லது ஒரு புதிய சந்தையில் தடம் பதித்து விரிவாக்கம் செய்ய விரும்பும் நிறுவனங்களாகும்.

மேலும், ஒரு நிறுவனம் கடனுக்கு விண்ணப்பிக்கிறது என்றால், அதில் குறைந்தபட்சம் 51 சதவீத பங்குகளை எஸ்சி, எஸ்டி அல்லது பெண் தொழில்முனைவோர் வைத்திருக்க வேண்டும். விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் ஆணாக இருந்தால், அவர் எஸ்சி அல்லது எஸ்டி பிரிவைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். நிமிர்ந்து நில் இந்தியாவின் அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பார்வையிட்டு அதில் உள்ள வழிகாட்டுதலின்படி கடனுக்கு விண்ணப்பிக்கலாம்: இணையதள முகவரி: https://www.standupmitra.in/Login/Register. இது தவிர www.jansamarth.inஎன்ற இணையதளத்தின் மூலமாகவும் கடன்களுக்கு விண்ணப்பிக்கலாம். ●



ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை 4 மடங்கு அதிகரிப்பு

| மார்ச் 2018 | பிப்ரவரி, 2025 |
|---|---|
| 15,233.78 கோடி ரூபாய் | 60,503 கோடி ரூபாய் |

கடன் அங்கீகரிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை: 2.67 லட்சம்

ஒப்புதலளிக்கப்பட்ட தொகை: 60,555 கோடி ரூபாய்

*2025 மார்ச் 5 வரையிலான புள்ளி விவரங்கள்



# கூட்டுறவுகளில் உலகளாவிய ஒத்துழைப்பின் மூலம் வளம்

**கூட்டுறவின் மூலம் வளம் என்ற நோக்கத்துடன், 2021-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் கூட்டுறவுத் துறைக்கென ஒரு தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டது. இப்போது, உலகளாவிய ஒத்துழைப்புடன் இதில் வலுவான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2025 மார்ச் 06 அன்று கூட்டுறவுத் துறை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி ஒரு புதிய பார்வையை வழங்கினார்...**

கூட்டுறவு அமைப்புகள் தற்சார்பின் சிறந்த வெளிப்பாடாகும். மேலும் நாட்டின் உணவு வழங்குநர்களான விவசாயிகளை வளப்படுத்துவதற்கான சக்திவாய்ந்த ஊடகமாகவும் கூட்டுறவு அமைப்புகள் உள்ளன. இந்தியாவில் கூட்டுறவு மாதிரியானது, கூட்டுறவின் மூலம் வளம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைவரையும் உள்ளடக்கியதாக இருப்பது மட்டுமல்லாமல், ஒவ்வொரு கிராமத்தையும் சென்றடைவதோடு, சமூக - பொருளாதார பிணைப்புகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போது, அதை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்தில், நாட்டின் கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துவதற்கும், கூட்டுறவு அமைப்புகள் மூலம் இயற்கை வேளாண் பொருட்களை ஊக்குவிப்பதற்கும், உலகளாவிய அமைப்புகளுடன் நமது கூட்டுறவு அமைப்புகள் ஒத்துழைப்போடு செயல்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். கூட்டுறவுத் துறையின் முன்னேற்றத்தை மறுஆய்வு செய்வதற்கான உயர்நிலைக் கூட்டத்திற்கு தலைமை வகித்த பிரதமர் நரேந்திர மோடி, ஏற்றுமதிச் சந்தைகளில் கவனம் செலுத்துவதற்கும் விவசாய நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மண் பரிசோதனை மாதிரிகளை உருவாக்குமாறு பரிந்துரை வழங்கினார். நிதிப்




## நாட்டின் மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் கூட்டுறவுத் துறையுடன் தொடர்புடையவர்களாக உள்ளனர்

- தற்போது, நாட்டின் மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் கூட்டுறவுத் துறையுடன் தொடர்புடையவர்களாக உள்ளனர். கூட்டுறவு அமைப்பில் 30-க்கும் மேற்பட்ட துறைகளைச் சேர்ந்த 8.2 லட்சத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன. 30 கோடிக்கும் அதிகமானோர் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.
- கூட்டுறவின் மூலம் வளம் (சஹ்கர் சே சம்ரிதி) என்ற தொலைநோக்குப் பார்வையை உணர்ந்து, கூட்டுறவு அமைச்சகம் பரந்த ஆலோசனை நடைமுறை மூலம் தேசிய கூட்டுறவுக் கொள்கை 2025-ன் வரைவைத் தயாரித்துள்ளது. கூட்டுறவுத் துறையின் முறையான, முழுமையான வளர்ச்சிக்கு உதவுவதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிக்கவும் வலுப்படுத்தவும் 7 முக்கிய பகுதிகளில் 60 முன்முயற்சிகளை கூட்டுறவு அமைச்சகம் எடுத்துள்ளது.
- மத்திய அரசு கூட்டுறவு அமைப்புகளின் மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. இதில் பத்துக்கும் மேற்பட்ட அமைச்சகங்களின் பதினைந்துக்கும் மேற்பட்ட திட்டங்கள் தொடக்க வேளாண் கடன் சங்கங்களின் (பிஏசிஎஸ்) நிலையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

## பால்வளத் துறையில் நிலைத்தன்மையும் சுழற்சிப் பொருளாதாரமும் குறித்த பயிலரங்கு தொடக்க விழா

மத்திய உள்துறை அமைச்சரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான அமித் ஷா, 2025 மார்ச் 03 அன்று புதுதில்லியில் 'பால்வளத் துறையில் நிலைத்தன்மையும் சுழற்சிப் பொருளாதாரமும்' என்பது குறித்த பயிலரங்கைத் தொடங்கி வைத்தார். கூட்டுறவு அமைச்சகம், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வள அமைச்சகம் ஆகிய இரண்டு அமைச்சகங்களின் கொள்கைகள் குறித்தும் முயற்சிகள் குறித்தும் இந்தப் பயிலரங்க அமர்வுகளில் கவனம் செலுத்தப்பட்டது. பால் பண்ணைத் தொழில் துறையில் நீடித்த பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தும் அதேவேளையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் இதன் நோக்கமாகும். பயிலரங்கத் தொடக்க விழா நிகழ்ச்சியில் பேசிய கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா, தற்போது நாம் இரண்டாம் கட்ட வெண்மைப் புரட்சியை நோக்கி நகரும் இந்த நிலையில், நிலைத்தன்மை, சுழற்சிப் பொருளாதாரம் ஆகியவற்றின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது என்று கூறினார். முதலாவது வெண்மைப் புரட்சிமுதல் தற்போதுவரை சாதித்தவற்றில் நிலைத்தன்மையும் சுழற்சிப் பொருளாதாரமும் இன்னும் சாதிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார். இரண்டாவது வெண்மைப் புரட்சியின் முக்கிய குறிக்கோள் நிலைத்தன்மையும் சுழற்சிப் பொருளாதாரத் தன்மையும்தான் என்றும், இவை தொடக்கத்திலிருந்தே கவனிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். பயிலரங்கின் போது, பல மாநிலங்களில் உயிரி எரிவாயு (பயோகேஸ்) ஆலைகள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. மேலும் சுழற்சிப் பொருளாதாரப் பால் உற்பத்தி நடைமுறைகளை விரிவுபடுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும், பால் பண்ணைத் தொழில் துறையை மிகவும் திறன் வாய்ந்ததாக மாற்றுவதில் மேம்பட்ட தொழில்நுட்பத்தின் பங்கை இந்தப் பயிலரங்கு எடுத்துக்காட்டியது. மத்திய அரசின் கால்நடை பராமரிப்பு - பால்வளத் துறை, தேசிய பால்வள வாரியத்துடன் இணைந்து இந்தப் பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தது.

பரிவர்த்தனைகளை எளிதாக்க ரூபே விவசாயி கடன் அட்டைகளுடன் யுபிஐ-யை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தையும் பிரதமர் நரேந்திர மோடி எடுத்துரைத்தார். அத்துடன் கூட்டுறவு நிறுவனங்களிடையே ஆரோக்கியமான போட்டியின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.
கூட்டுறவுத் துறையில் தொழில்நுட்ப உள்ளடக்கத்தின் உதவியுடன் கூட்டுறவின் மூலம் வளம் என்ற கொள்கையை ஊக்குவிப்பது, கூட்டுறவு அமைப்புகளில் இளைஞர்கள், பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பது ஆகியவை குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய கூட்டுறவு அமைப்புகளின் சொத்துக்களை ஆவணப்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். விவசாய நடைமுறைகள் மிகவும் நிலையான வேளாண் மாதிரியுடன் கூடியதாக மாற்ற, கூட்டுறவுத் துறை அதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

## பள்ளிகள், கல்லூரிகள், இந்திய மேலாண்மைக் கழகங்களில் கூட்டுறவு தொடர்பான பாடங்களைக் கற்பிக்க நடவடிக்கை

ஆய்வுக் கூட்டத்தில், கூட்டுறவுத் துறையில் விவசாயம் தொடர்பான நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்த டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பைப் (அக்ரிஸ்டாக்) பயன்படுத்துமாறு பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை வழங்கினார். இது வேளாண் துறை தொடர்பான சேவைகளை விவசாயிகள் அணுகுவதை எளிதாக்கும். பள்ளிகள், கல்லூரிகள், இந்திய மேலாண்மை நிறுவனங்கள் (ஐஐஎம்) ஆகியவற்றில் கூட்டுறவுப் பாடப்பிரிவுகளைத் தொடங்கவும், இத்துறையில் எதிர்கால சந்ததியினரை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி கூறினார். ●

# தேவபூமியான உத்தராகண்டில் எல்லா பருவத்திலும் சுற்றுலாவுக்கான சூழல் நிலவ வேண்டும்– சுற்றுலாவுக்கான சீசன் இல்லை என்ற நிலையே இருக்கக்கூடாது



**பசுமையான காடுகள், பனி மூடிய சிகரங்கள், சலசலக்கும் ஆறுகள், வளம் நிறைந்த பள்ளத்தாக்குகள் என இவை அனைத்துடனும், கடவுளின் பூமியாக (நான்கு புனித தளங்கள்) உள்ள உத்தராகண்ட் அனைவரையும் ஈர்ப்பதாக உள்ளது. அது சார் தாம் திட்டமாக இருந்தாலும் சரி அல்லது சுற்றுலா தொடர்பான வசதிகளை மேம்படுத்துவதாக இருந்தாலும் சரி... வாய்ப்புகள் நிறைந்த இந்த மண் ஒவ்வொரு நாளும் வளர்ச்சியின் புதிய அத்தியாயங்களை எழுதி வருகிறது. குளிர்கால சுற்றுலாவுடன், உத்தராகண்ட் இப்போது வாய்ப்புகளின் புதிய கதவுகளைத் திறக்கிறது. இயற்கையின் மடியில் அமைந்துள்ள இந்த மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலா சீசன் இல்லை (ஆஃப் சீசன்) என்ற நிலையே இருக்கக்கூடாது என்றும் அனைத்துக் காலங்களிலும் இங்கு சுற்றுலாவுக்கான சூழல் நிலவ வேண்டும் எனவும் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

கடந்த சில ஆண்டுகளாக, உத்தராகண்ட் மாநில அரசு, மத்திய அரசின் உதவியுடன் வளர்ச்சியின் புதிய அத்தியாயங்களை எழுதி வருகிறது. சுற்றுச்சூழல் சுற்றுலா முதல் நான்கு புனித தலங்கள் வரை, மலை மீது இருசக்கர வாகனம் ஓட்டுதல் முதல் பாறை ஏறுதல் வரை, பனிச் சறுக்கு முதல் குளிர் விளையாட்டுகள் வரை, அரசு பல முக்கியமான பணிகளைச் செய்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில், உத்தராகண்டின் வளர்ச்சிக்காக அரசு கோடிக்கணக்கான ரூபாயை முதலீடு செய்துள்ளது. இதன் விளைவு தற்போது தெரியத் தொடங்கியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக அரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, உத்தராகண்டில் சுற்றுலாவும் வேலைவாய்ப்புகளும் வேகமாக அதிகரித்து வருகின்றன. பக்தர்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டு உள்ளதன் காரணமாக, நான்கு புனித தலங்களின் யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களின் எண்ணிக்கை தற்போது ஆண்டுக்கு சுமார் 50 லட்சமாக அதிகரித்துள்ளது. 2014-ம் ஆண்டுக்கு முன்பு, இந்த எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 18 லட்சத்துக்கும் குறைவாக இருந்தது.

சுற்றுலாத் துறையை பன்முகப்படுத்துவதும், சுற்றுலாவைக் குறிப்பிட்ட கால (சீசன்) நடைமுறையாக இல்லாமல் ஆண்டு முழுவதும் செயல்படும் நடவடிக்கையாக மாற்றுவதும் உத்தராகண்ட் மாநிலத்திற்கு முக்கியமானது என்று 2025 மார்ச் 06 அன்று உத்தராகண்ட் மாநிலம் ஹர்ஷிலில் நடைபெற்ற குளிர்கால சுற்றுலா நிகழ்ச்சியில் பிரதமர் கூறினார். உத்தராகண்ட் மாநிலத்தில் சுற்றுலாவுக்கான தனி பருவ காலம் இல்லாத நிலை வேண்டும், அதாவது ஆஃப் சீசன் (பருவ காலமின்மை) இருக்க கூடாது எனவும், அனைத்துப் பருவ காலங்களிலும் இங்கு சுற்றுலா செழிக்க வேண்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி விரும்புகிறார். மலைப்பகுதிகளில் சுற்றுலா என்பது பருவகால சுற்றுலா நடவடிக்கையாகவே அமைந்துள்ளது. இப்பகுதிகளில் மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக இருந்தாலும், அதன் பிறகு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்குகிறது. எனவே, பெரும்பாலான உணவகங்கள், தங்குமிடங்கள், சொகுசு விடுதிகள், தங்கும் இல்லங்கள் ஆகியவை குளிர்காலத்தில் காலியாகவே இருக்கும். இந்த ஏற்றத்தாழ்வு காரணமாக, உத்தராகண்ட் மாநிலம், ஆண்டின் பெரும்பகுதி காலத்தில் பொருளாதார ரீதியாக தேக்கமடைந்த நிலையில் உள்ளது என பிரதமர் கூறினார். ஆனால் குளிர்காலத்தில் உத்தராகண்ட் செல்வது தேவபூமியின் தெய்வீக ஒளியின் உண்மையான காட்சியை வழங்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி எடுத்துரைத்தார். உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள மதம் சார்ந்த புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்ல குளிர்காலம் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

## பிரதமரின் வேண்டுகோள்

- குளிர்காலத்தில் இளைஞர்கள் சுற்றுலாவாக மலைப்பகுதிகளுக்கு வர வேண்டும்.
- கார்வாலியில் 'வெயில் குளியல்' (GhamTapo Tourism - Basking in the Sun Tourism) என்ற கருத்தாக்கத்தைப் பிரதமர் பரிந்துரைத்தார்.
- பெருநிறுவனங்கள், உத்தராகாண்டில் கூட்டங்கள், மாநாடுகள், கண்காட்சிகளை நடத்த வேண்டும்.
- குளிர்காலத்தில் நடைபெறும் திருமணங்களுக்கு உத்தராகண்ட்டில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.
- குளிர்காலத்தில் திரைப்படப் படப்பிடிப்புக்கு ஏற்ற இடமாக உத்தராகண்ட் மாற வேண்டும்.
- உத்தராகண்ட் மாநிலத்தின் வெந்நீர் ஊற்றுகளை மருத்துவ ஆரோக்கிய நீரூற்றுகளாக உருவாக்க வேண்டும்.
- பனி மூடிய பகுதிகளில் குளிர்கால யோகா முகாம்களை நடத்த வேண்டும்.
- குளிர்காலத்தில் வனவிலங்குகளைப் பார்வையிடும் சிறப்புப் பயணத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- நாட்டின் இளைஞர்களும் படைப்பாளிகளும் குளிர்கால சுற்றுலாவை ஊக்குவிக்க வேண்டும்.
- உள்ளடக்கப் படைப்பாளிகளைக் கொண்டு குளிர்கால சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் குறும்படப் போட்டிகள் நடத்த வேண்டும்.

**முத்ரா கடன்:** சுற்றுலாவையும் வேலைவாய்ப்பையும் மேம்படுத்துவதற்காக உத்தராகண்டில் தங்கும் இல்லங்கள் ஊக்குவிக்கப்படும். இதற்காக, முத்ரா கடன் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அரசின் இந்த முடிவால், மலை மாநிலங்களில் தங்கும் இல்லங்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கேதார்நாத்திற்கான பயணத்திற்குத் தற்போது 8 முதல் 9 மணி நேரம் வரை ஆகும் நிலையில், கம்பி வழித்தடம் (ரோப்வே) அமைக்கப்பட்ட பிறகு இது சுமார் 30 நிமிடங்களிலேயே நிறைவடையும்.**

> **"சுற்றுலாத் துறையை பன்முகப்படுத்துதலும், அதை அனைத்து காலங்களுக்குமான குன்றாத துறையாக மாற்றுவதும் உத்தராகண்ட் மாநிலத்திற்கு மிகவும் முக்கியமானது. உத்தராகண்டில் சுற்றுலா பருவம் அல்லாத காலம் என்பதே (ஆஃப் சீசன்) இருக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். அனைத்து பருவ நிலைகளிலும் சுற்றுலா தொடர வேண்டும்"**
>
> **- நரேந்திர மோடி, பிரதமர்**

ஏனெனில் குளிர் காலத்தில் இங்குள்ள பல புனித தலங்களில் தனித்துவமான சடங்குகளும், பூஜைகளும், வழிபாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளில் சார் தாம் (நான்கு புனித தலங்கள்) பகுதிக்கு, அனைத்து வானிலைச் சூழலுக்கும் ஏற்ற சாலை, நவீன விரைவுச் சாலைகள், ரயில்வே, விமானம், ஹெலிகாப்டர் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மலைப்பகுதிகளில் சுற்றுச்சூழல் குடில்கள், மாநாட்டு மையங்கள், ஹெலிபேட் உள்கட்டமைப்புகள் ஆகியவற்றை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. டிம்மர்-சைன் மகாதேவ், மனா கிராமம், ஜடுங் கிராமம் போன்ற இடங்களில் சுற்றுலா உள்கட்டமைப்புகள் புதிதாக உருவாக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலா மூலம் உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள எல்லைப் பகுதிகள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்திலும் அரசு செயல்பட்டு வருகிறது.



**பாரம்பரியத்தோடு வளர்ச்சி**

# கேதர்நாத்– ஹேம்குந்த் சாஹிப் இடையே ரோப்வே கட்டப்பட உள்ளது

கேதர்நாத் புனித்தலம், ஹேம்குந்த் சாஹிப் ஆகியவை இந்திய நம்பிக்கையின் சின்னங்களாக விளங்குவதுடன், அந்த இடங்களை பயணிகள் அணுக முடியாத அளவிற்கு நீண்ட தூரத்தை கடினமாக நடந்தே அடைய வேண்டியிருக்கிறது. எனவே, பாரம்பரியத்தோடு வளர்ச்சி என்ற உறுதிப்பாட்டுடன் அரசு தற்போது இங்கே ரோப்வே கட்டவுள்ளது. இது தொடர்பான பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது...

**முடிவு: கோவிந்காட் முதல் ஹேம்குந்த் சாஹிப் ஜி வரை ரோப்வே கட்டப்படும்.**

**தாக்கம்:** கோவிந்த்காட் முதல் ஹேம்குந்த் சாஹிப் வரை 2,730.13 கோடி ரூபாய் செலவில் ரோப்வே கட்டப்படும். ஒவ்வொரு மணி நேரமும் 1100 பயணிகளும், நாள்தோறும் 11 ஆயிரம் பயணிகளும் ரோப்வே மூலம் பயணிக்க இயலும். உத்தராகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் ஹேம்குந்த் சாஹிப் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 15 ஆயிரம் அடிக்கு மேலே உள்ளது. இங்கே குருத்வாரா ஆண்டுக்கு சுமார் ஐந்து மாதங்கள் திறக்கப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 2 லட்சம் யாத்ரீகர்கள் இங்கே வருகை தருகிறார்கள். தற்போது, கோவிந்த் காட்டிலிருந்து ஹேம்குந்த் சாஹிப் வரையிலான 21 கிலோமீட்டர் சவாலான மலை ஏறுதலை நடந்தும், குதிரை வண்டியிலோ அல்லது பல்லக்கிலோ அடைய வேண்டியுள்ளது. பரிந்துரைக்கப்பட்டுள்ள ரோப்வே ஹேம்குந்த் சாஹிப் செல்லும் யாத்ரீகர்களுக்கும், மலர்கள் பள்ளத்தாக்கிற்கு செல்லும் சுற்றுலா பயணிகளுக்கும் வசதியாக அமையும். இதன் மூலம், பயண தூரத்தை 42 நிமிடங்களில் அடைய முடியும்.




**சோன்ப்ரயாக் முதல் கேதர்நாத் வரையிலான**
ரோப்வே திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

| செலவு | தூரம் |
|---|---|
| 4,081.28 கோடி | 12.9 கி.மீ |

**1800**
பயணிகள் ஒவ்வொரு திசையிலும், ஒரு மணி நேரத்திற்கு பயணிக்கும் திறன் மற்றும் நாளொன்றுக்கு 18,000 பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும்.

**16**
கிமீ தூரத்திற்கு கடினமான மலை ஏறுதல் கௌரிகுந்த் முதல் கேதர்நாத் கோயில் வரை

**36**
நிமிடங்களில் பயணத்தை நிறைவு செய்ய முடியும். தற்போது, இதற்கு 9 மணி நேரங்கள் ஆகிறது.

**06**
ஆண்டுகளில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். இது பொது-தனியார் கூட்டாண்மையின் கீழ் கட்டப்படும்.

**முடிவு: கால்நடை சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் திட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு ஒப்புதல்.**

**தாக்கம்:** தடுப்பூசி, கண்காணிப்பு, மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் மூலம் கால்நடை நோய் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதலுக்கு இந்த திட்டம் உதவிடும். இத்திட்டம் உற்பத்தியை அதிகரிக்க செய்யும். வேலைவாய்ப்பு உருவாகும், ஊரகப் பகுதிகளில் தொழில் முனைவு மேம்படும், நோய் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பு தடுக்கப்படும்.

> உத்தராகண்ட் தேவ் பூமியில் இரண்டு புதிய ரோப்வே–க்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்து இரண்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. சோன்ப்ரயாக் முதல் கேதார்நாத் வரையிலும், கோவிந்த்காட் முதல் ஹேம்குந்த் சாஹிப் ஜி வரையிலான கட்டுமானங்கள் யாத்திரீகர்களுக்கு நேரத்தை மிச்சப்படுத்தும். அவர்களுடைய பயணம் மேலும் சுலபமாகும்.
>
> - நரேந்திர மோடி, பிரதமர்



# ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் அளித்தல்...

## வளர்ச்சியடைந்த நாட்டை நோக்கிய முதல் படி

**புதிய இந்தியா தற்போது வளர்ச்சியின் முக்கியத் தூணாக மகளிருக்கு அதிகாரம் அளித்தலில் வலிமையாக கவனம் செலுத்துவதுடன் ஏழ்மையை முடிவுக்கு கொண்டு வர அதன் அசைக்க முடியாத உறுதிப்பாடு மூலம் வரையறுக்கப்பட்டுள்ளது. 2014ம் ஆண்டிலிருந்து, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு இந்த விவகாரங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, இந்த இலக்குகளை அடையும் நோக்கில் பல்வேறு திட்டங்களை தொடங்குகிறது. இந்த முன் முயற்சிகள் பல்வேறு இலக்குகளை கடந்து புதிய மைல்கற்களை அடைந்துள்ளன. தமது இரண்டு நாள் குஜராத் பயணத்தின் போது, கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலான இத்தகைய முயற்சிகளின் எதிர்காலம் மற்றும் செழுமை குறித்து பிரதிபலித்தார். சூரத்தில், அவர் உணவு பாதுகாப்பு செரிவூட்டல் இயக்கத்தை தொடங்கி வைத்தது, நவ்சாரியில் சர்வதேச மகளிர் தினத்தன்று லட்சாதிபதி சகோதரிகளிருடன் அவர் உரையாடியது, அரசின் இத்தகைய உறுதிப்பாட்டுகளுக்கு மேலும் வலுவூட்டுகிறது...**

கடந்த பத்தாண்டுகளில், ஏழைகளுக்கு அதிகாரமளிக்க இந்தியா துரிதமாக பணியாற்றி உள்ளது. ஏழைகளுக்கு பாதுகாப்பு சுழற்சி உருவாக்கப்பட்டது. அதனால், அவர்கள் யாரிடமும் யாசகம் கேட்கவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகள், கழிவறை, எரிவாயு இணைப்பு, குழாய் வழி குடிநீர் இணைப்பு, பிரதமரின் ஊட்டச்சத்து, சாக்ஷம் அங்கன்வாடி, (ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம்) மகப்பேறு நிதியுதவி திட்டம், நேரடி பணப் பரிமாற்றம், 5 லட்சம் ரூபாய் வரை மதிப்பிலான இலவச சிகிச்சை, பிரதமரின் செல்வமகள் சேமிப்புத் திட்டம், தொழில் தொடங்குவதற்கு பிரதமரின் ஸ்வநிதி, பிரதமரின் முத்ரா போன்ற திட்டங்கள் மேம்பாட்டுக்கு புதிய அத்தியாயத்தை எழுதியுள்ளன. சூரத்தில் உணவு பாதுகாப்பு செறிவூட்டல் இயக்கம் தொடங்கியபோது, இத்தகைய முயற்சிகளைப் பற்றி பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார். நாட்டில் ஏழைகளின் வீடுகளில் அடுப்பு எரியாமல் இருப்பதும், குழந்தைகள் கண்ணீருடன் உறங்கச் செல்வதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார். கொவிட் பெருந்தொற்றின்போது தொடங்கப்பட்ட பிரதமரின் ஏழைகள் நலத் திட்டம் குறித்து





# நவ்சாரியில் மகளிர் சக்திக்கு மரியாதை...

## எனது வாழ்க்கையில் கோடிக்கணக்கான தாய்மார்கள் மற்றும் சகோதரிகளின் ஆசிர்வாதங்கள் உள்ளன என்று பிரதமர் கூறினார்

சர்வதேச மகளிர் தினத்தன்று, நவ்சாரியின் வன்சி- போர்சி கிராமத்தில் சுமார் 1.5 லட்சம் லட்சாதிபதி சகோதரிகளுடன் பிரதமர் உரையாற்றும் போது, "உலகில் தாம் மிகப்பெரிய பணக்காரர் என்று கூறினார். எனது வாழ்க்கையில் கோடிக்கணக்கான தாய்மார்கள் மற்றும் சகோதரிகளின் ஆசிர்வாதங்கள் உள்ளது என்று கூறினார்."

பெண்களை நாராயணி என்று நமது வேதங்கள் கௌரவப்படுத்தியுள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்தார். அதனால்தான், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கவும், அதன் விரைவான வளர்ச்சிக்காகவும், தற்போது இந்தியா மகளிர் சார்ந்த வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருப்பதாக தெரிவித்தார். மகளிர் வாழ்க்கையில் கண்ணியம், வசதி ஆகிய இரண்டிற்கும் எங்களுடைய அரசு உயர் முன்னுரிமை அளிக்கிறது. தற்போது பெண்கள் அரசு மற்றும் பெரும்பாலான நிறுவனங்கள் என சமூகத்தில் சிறந்த வாய்ப்பு பெறுகின்றனர் என்று பிரதமர் மோடி தெரிவித்தார். அரசியல், விளையாட்டு, நீதித்துறை, அல்லது சட்ட அமலாக்கம் என ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு களத்திலும், ஒவ்வொரு பரிணாமத்திலும் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். 2014ம் ஆண்டுக்குப் பிறகே அதிக எண்ணிக்கையிலான பெண்கள் மத்திய அரசின் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவமும் மகத்துவமிக்க முறையில் அதிகரித்துள்ளதை காண முடிகிறது. அதேபோல், நமது நீதித்துறையில் பெண்களின் பங்களிப்பு கணிசமாக அதிகரித்துள்ளது. இந்தியா தற்போது உலகின் மூன்றாவது மிகப்பெரிய புத்தொழில் சூழலுடன் திகழ்வதாகவும், இவற்றில் சுமார் பாதி அளவு புத்தொழில் நிறுவனங்களின் இயக்குநர்களில் ஒருவராக பெண்களும் உள்ளனர் என்று அவர் கூறினார். விண்வெளி ஆய்வு மற்றும் அறிவியலில் நமது நாடு புதிய உச்சத்தை அடைந்து கொண்டிருக்கிறது. அவற்றில் பல்வேறு பெரிய திட்டங்களுக்கு பெண் விஞ்ஞானிகள் தலைமை வகிக்கின்றனர். உலகில் அதிக எண்ணிக்கையிலான பெண் பைலட்டுகள் இந்தியாவில் உள்ளனர் என்பது மிகச் சிறந்த பெருமை அளிக்கும் அம்சமாகும்.

லட்சாதிபதி சகோதரிகளுடன் பிரதமர் மோடி உரையாடிய போது, சரப்த் தயாரிப்பு, ட்ரோன் பறக்கச் செய்தல், பூ வேலைப்பாடு, தானியங்களை விற்பனை செய்தல், முத்துக்களிலான பணி ஆகியவற்றின் மூலம் ஆண்டிற்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருவாய் ஈட்டுவதாக தெரிவித்தனர். இதில் 3 கோடி லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்குவது தமது கனவு என்றும், ஆனால், நீங்கள் 5 கோடி என்ற எண்ணிக்கையை அடைந்து விடுவீர்கள் என்று தெரிவதாக பிரதமர் மோடி கூறினார்.

### அரசு– நட்பு, அரசு– வெற்றி திட்டங்கள் தொடக்கம்

நவ்சாரியில் மகளிர் தினத்தன்று குஜராத் அரசு ஏற்பாடு செய்திருந்த மற்றொரு நிகழ்ச்சியில் அரசு- நட்பு, அரசு - வெற்றி ஆகிய திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். அரசு- நட்பு திட்டம் புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதி ஆதரவு அளித்து ஊரக வாழ்வாதாரங்களுக்கு உகந்த சூழலை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது. அதேபோல், அரசு- வெற்றி திட்டம் குஜராத்தின் இரண்டு முன்னேற விரும்பும் மாவட்டங்கள்,13 முன்னேற விரும்பும் வட்டங்களுக்கு ஏழைக் குடும்பங்களின் சுய உதவிக்குழுவைச் சேர்ந்த பெண்களுக்கு நிதி உதவியும், தொழில்முனைவு பயிற்சியும் வழங்கும்.

### பிரதமரின் சமூக ஊடக கணக்குகளை ஆறு பெண்கள் கையாண்டனர்

சர்வதேச மகளிர் தினத்தன்று, பிரதமர் நரேந்திர மோடி தனித்துவமிக்க நடவடிக்கை எடுத்து தமது சமூக ஊடக கணக்குகளை கையாளும் பொறுப்பை உத்வேகம் அளிக்கும் ஆறு பெண்களுக்கு அளித்தார். இந்நடவடிக்கை மூலம் மகளிருக்கு அதிகாரம் அளித்தலையொட்டிய தமது உறுதிப்பாட்டிற்கு மேலும் வலு சேர்த்தார். செஸ் வீராங்கனை வைஷாலி ரமேஷ் பாபு, பீகாரின் காளான் பெண் அனிதா தேவி, பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் அணு விஞ்ஞானி எலினா மிஷ்ரா, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் விண்வெளி விஞ்ஞானி ஷில்பி சோனி, ஃப்ரண்டியர் மார்க்கெட் நிறுவனத்தின் நிறுவனரும், தலைமைச் செயல் அதிகாரியுமான அஜய்தா ஷா, உலகளாவிய அணுகலுக்கான சமத்ரயம் மையத்தின் நிறுவனர் டாக்டர் அஞ்சலி அகர்வால் உள்ளிட்டோர் பிரதமரின் சமூக ஊடக கணக்குகளை கையாண்டவர்கள் ஆவர்.

குறிப்பிட்ட பிரதமர் மோடி, நாட்டு மக்களுக்கு மிகவும் அவசியமான உதவி தேவைப்பட்டபோது இந்த இயக்கம் மூலம் மத்திய அரசு அவர்களுக்கு கூட்டாளராக உறுதுணையாக இருந்தது என்று தெரிவித்தார். தற்போது இத்திட்டத்திற்காக மத்திய அரசு

## கிர் பூங்காவில் புகைப்படம், வந்தராவில் வன உயிரினங்களை அரவணைத்தல்

உலக வன உயிரின தினத்தையொட்டி, பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 1 முதல் 3 ம் தேதி வரை குஜராத்தில் மூன்று நாள் பயணம் மேற்கொண்டார். இப்பயணத்தின் போது, தேசிய வன உயிரின வாரியத்தின் 7வது கூட்டத்திற்கும் அவர் தலைமை தாங்கினார். வன உயிரின பாதுகாப்பில் அரசு மேற்கொண்ட பல்வேறு முன் முயற்சிகள் குறித்து தேசிய வன உயிரின வாரியம் ஆய்வு செய்தது. இக்கூட்டத்தில், நாட்டில் முதல் முறையாக ஆற்று டால்ஃபின் மதிப்பீடு அறிக்கையை பிரதமர் மோடி வெளியிட்டார். அத்துடன் மத்தியப் பிரதேசத்தில் உள்ள காந்தி சாகர் சரணாலயம், குஜராத்தில் பன்னி புல்வெளிகள் உட்பட மற்ற பகுதிகளில் சிறுத்தைகளை அறிமுகம் செய்வது குறித்து அறிவித்தார். ஜூனாகத்தில் தேசிய வன உயிரின பரிந்துரை மையத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டினார். இந்த மையம் வன உயிரின சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மேலாண்மை தொடர்பான பல்வேறு அம்சங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் நிர்வாகத்திற்கான மையமாக இயங்கும்.

ஆசிய சிங்கங்களின் தாயகம் என்று அறியப்படும் குஜராத்தின் கிர் தேசிய பூங்காவிற்கு மார்ச் 3 அன்று பிரதமர் நரேந்திர மோடி சென்றார். ஆசிய சிங்கங்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்ட அவர், கிர் தேசிய பூங்காவிற்கு வருகை தந்ததன் மூலம் தாம் குஜராத் முதலமைச்சர் ஆக இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த நினைவுகள் எழுந்ததாக கூறினார். அதே நேரத்தில், ஜாம்நகர் வந்தராவில் வன உயிரின மீட்பு, மறுவாழ்வு, மற்றும் பாதுகாப்பு மையத்தை அவர் தொடங்கி வைத்தார்.

**2,000** க்கும் மேற்பட்ட விலங்கினங்கள் வந்தராவில் உள்ளன. வந்தராவில் 1.5 லட்சத்திற்கும் மேற்பட்ட மீட்கப்பட்ட, ஆபத்திற்குள்ளான, அச்சுறுத்தலுக்குள்ளான விலங்குகள் உள்ளன.



பிரதமர் மோடி ஆசிய சிங்கக் குட்டிகள், வெள்ளை சிங்கக்குட்டிகள், பெரிய புள்ளி சிறுத்தை குட்டிகள், கராகல் குட்டிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்கினங்களுடன் விளையாடினார். அத்துடன் குட்டிகளுக்கு அவர் பாலூட்டினார். பெரிய புள்ளி சிறுத்தைக் குட்டிகள் அரிதான, ஆபத்திற்குள்ளான விலங்கினங்கள் ஆகும்.

ஆண்டுதோறும் 2.25 லட்சம் கோடி ரூபாய் செலவழிக்கிறது. அதனால், ஒவ்வொரு ஏழை மக்களின் வீடுகளிலும் அடுப்பு எரிகிறது. குஜராத் அரசை பாராட்டிய பிரதமர் மோடி, மாநில அரசும் இதை விரிவுபடுத்தி உள்ளதாக தெரிவித்தார். குஜராத் அரசு வருவாய் உச்சவரம்பை அதிகரித்துள்ளது. அதனால், மேலும் அதிகமான பயனாளிகள் இதனால் பயன் அடைகின்றனர்.


# இந்தியா புத்தாக்கத்தின் விளை நிலமாக மாறி வருகிறது

பூஜ்ஜியம் என்ற கோட்பாட்டை உலகிற்கு வழங்கிய இந்தியா, தற்போது அளவற்ற புத்தாக்கங்களின் மையமாக உருவாகி வருகிறது. இதன் காரணமாகவே இந்தியா உலகின் புதிய தொழிற்சாலையாக உருவெடுத்து உள்ளது. இன்று, இந்தியர்கள் ஒரு தொழிலாளர் சக்தியாக மட்டுமின்றி, கணக்கில் கொள்ள வேண்டிய உலகளாவிய சக்தியாகவும் பார்க்கப்படுகிறார்கள். உலகின் பார்வை *21* ஆம் நூற்றாண்டின் இந்தியாமீது நிலைத்துள்ளது. உலகெங்கிலும் உள்ள மக்கள் இந்தியா என்ன தரப் போகிறது என்பதை ஆராய்ந்து புரிந்துகொள்ள ஆர்வமாக உள்ளனர். இந்தியா ஒவ்வொரு நாளும் புதிய மைல்கற்களையும் சாதனைகளையும் கொண்டு வருகிறது. மேலும், குறைகடத்திகள் முதல் விமானம் தாங்கி போர்க் கப்பல்கள் போன்ற மேம்பட்ட பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் வரை பல்வேறு துறைகள், இந்தியாவின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான அற்புதமான புதிய அற்புதமான சாத்தியக்கூறு மிக்க வாய்ப்புகளைத் திறந்து விடுகின்றன.



தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் மார்ச் 1 ஆம் தேதி நடைபெற்ற என்எக்ஸ்டி மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடி, ஒவ்வொரு உலகளாவிய தளத்திலும் தனது கொடி பறப்பதைக் காண்பது இந்தியாவின் விருப்பம் என்றும், இந்த சிந்தனையுடன் நாடு முன்னேறி வருவதாகவும் கூறினார். ஒவ்வொரு குடிமக்களுக்கும், தொழில்முனைவோருக்கும் நாட்டை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற கனவும் உறுதியும் இருக்க வேண்டும். உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு சந்தையிலும், வீட்டிலும், உணவருந்தும் மேசைகளிலும் இந்திய அடையாளங்கள் தெரிவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு, பிரதமர் மோடி 'உள்ளூருக்கான குரல்' மற்றும் 'உலகளவில் உள்ளூர்' என்ற கருத்துக்களை அறிமுகப்படுத்தினார். தற்போது, இந்த கண்ணோட்டம் நனவாகி வருகிறது. இந்திய ஆயுஷ் தயாரிப்புகள் மற்றும் யோகா ஆகியவை உள்ளூர் அங்கீகாரத்திலிருந்து உலகளாவிய அங்கீகாரத்திற்கு வெற்றிகரமாக விரிவடைந்துள்ளன. 'இந்திய தயாரிப்பு' என்பது உலகளாவிய தாரக மந்திரமாக மாறுவதை பிரதமர் மோடி நோக்கமாகக் கொண்டுள்ளார். அவரது கனவு என்னவென்றால், மக்கள் சுகாதாரத்தை நாடும்போது, அவர்கள் 'இந்தியாவில் குணமடைவார்கள்' என்றும், திருமணங்களைத் திட்டமிடும்போது, 'இந்தியாவில் திருமணம் செய்ய வேண்டும்' என்றும் கருதுகிறார்கள். தெற்கு உலகின் குரலையும் இந்தியா உயர்த்தியுள்ளது. மேலும், தீவு நாடுகளின் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளது. பருவநிலை மாற்ற நெருக்கடியை எதிர்கொள்ள, இந்திய வாழ்வியல் தொலைநோக்கு திட்டத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியது மற்றும் சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டணி மற்றும் பேரழிவு நெகிழ்திறன் உள்கட்டமைப்புக்கான கூட்டணி போன்ற முன்முயற்சிகளில் முன்னணியில் உள்ளது. இந்தியா உலகிற்கு பொருட்களை வழங்குவது மட்டுமின்றி, உலகளாவிய விநியோகச் சங்கிலியில் நம்பகமான மற்றும் நம்பத்தக்க கூட்டாளியாகவும் உருவெடுத்து வருகிறது. மலிவான இணைய தரவு நாட்டில் கைபேசிகளுக்கான தேவையை அதிகரித்துள்ளது. பி.எல்.ஐ போன்ற திட்டங்கள் தேவையை வாய்ப்பாக மாற்றி, மருந்துகள் முதல் மின்னணுவியல் வரையிலான துறைகளில் இந்தியாவை ஏற்றுமதி நாடாக மாற்றியுள்ளன. உலகின் பல நாடுகள் இந்தியாவின் டிஜிட்டல்

## இந்த மாநாட்டில் பிரதமர் மோடியின் கவனம் பின்வரும் விஷயங்களில் இருந்தது...



- குறைக்கடத்திகள் முதல் விமானம் தாங்கி போர்க் கப்பல்கள் வரை அனைத்தும் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன.
- தற்போது ஆயுஷ் தயாரிப்புகள் மற்றும் யோகா ஆகியவை உள்ளூரில் இருந்து உலகளாவியதாக மாறியுள்ளன.
- இந்தியாவின் சிறந்த உணவான, காபி, சிறுதானியங்கள்-ஸ்ரீ அன்னா மற்றும் மக்கானா ஆகியவை உள்ளூரில் இருந்து உலக நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.



உலகிற்கு தேவையான **60%** மஞ்சள் இந்தியாவால் விநியோகிக்கப்படுகிறது.

- இந்தியா உலகின் ஏழாவது பெரிய காபி ஏற்றுமதி நாடாக மாறியுள்ளது.
- இந்திய கைப்பேசிகள், மின்னணு சாதனங்கள், மருந்துகள் ஆகியவை உலகளவில் அடையாளத்தை ஏற்படுத்தி வருகின்றன.
- உலகின் புதிய தொழிற்சாலையாக இந்தியா மாறி வருகிறது. இந்தியா ஒரு தொழிலாளர் சக்தி மட்டுமின்றி, ஒரு உலக சக்தியாகவும் உருவெடுத்துள்ளது!
- இந்தியா இறக்குமதி செய்து வந்த பொருட்களுக்கான வளர்ந்து வரும் ஏற்றுமதி மையமாக மாறி வருகிறது.
- விவசாயிகளின் பயிர்கள் உலகம் முழுவதும் உள்ள சந்தைகளை அடைகின்றன.
- புல்வாமாவின் பனீ பட்டாணி, மகாராஷ்டிராவின் புரந்தர் அத்தி மற்றும் காஷ்மீரின் கிரிக்கெட் மட்டைகளின் தேவை தற்போது உலகளவில் அதிகரித்து வருகிறது.
- இந்தியாவின் பாதுகாப்புத் தளவாடங்கள் இந்திய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வலிமையை உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றன.
- கடந்த பத்தாண்டுகளில், 2.5 கோடிக்கும் அதிகமான குடும்பங்களை முதல் முறையாக மின்சாரம் சென்றடைந்துள்ளது.
- நாட்டில் இணைய தரவு மலிவான பிறகு, கைப்பேசிகளுக்கான தேவை அதிகரித்தது.
- இப்போது சில நிமிடங்களில் வருமான வரி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு, திருப்பி செலுத்தப்படும் தொகையும் சில நாட்களுக்குள் நேரடியாக கணக்கில் டெபாசிட் செய்யப்படுகிறது.



**12** லட்சம் ரூபாய் வரையிலான வருமானத்துக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- பூஜ்ஜியம் என்ற கோட்பாட்டை உலகிற்கு வழங்கிய இந்தியா, இன்று எல்லையற்ற புத்தாக்கங்களின் மையமாக மாறி வருகிறது.
- கோவிட் தொற்றுநோய்க்கான இந்தியாவின் தடுப்பூசி, தரமான சுகாதார தீர்வுகளுக்கான மாதிரியை உலகிற்கு வழங்கியது.
- 2025-26 பட்ஜெட்டில் 50 ஆயிரம் புதிய அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.



> உள்ளூருக்கான குரல், உலகளவில் உள்ளூர் என்ற தொலைநோக்குக் கண்ணோட்டம் நனவாவதை இந்தியா காண்கிறது. நமது ஆயுஷ் தயாரிப்புகளும், யோகாவும் உள்ளூர் முதல் உலகளாவியதாக மாறியுள்ளன. இன்று இந்தியாவின் சிறந்த உணவான, நமது மக்கானா, உள்ளூர் முதல் உலகளாவியதாக மாறுகிறது. இந்தியாவின் ஸ்ரீ அன்னாவும் ஊள்ளூரில் இருந்து உலகளவில் சென்றடைந்துள்ளது.
>
> **- நரேந்திர மோடி, பிரதமர்**

**நாட்டின் ஆராய்ச்சியாளர்களின் கவலையை நீக்கியது:** ஒரே நாடு ஒரே சந்தா முடிவு எடுக்கப்பட்டது. இதன் மூலம் உலகப் புகழ் பெற்ற இதழ்கள் நாட்டில் உள்ள அனைத்து ஆராய்ச்சியாளர்களுக்கும் இலவசமாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த முன்முயற்சிக்காக **6** ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்படும்.



பொது உள்கட்டமைப்பான இந்தியா ஸ்டேக் உடன் இணைய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு வருகின்றன. இந்தியா ஒரு பெரிய விண்வெளி சக்தியாக உள்ளது. மேலும், மற்ற நாடுகளின் விண்வெளி விருப்பங்களை நிறைவேற்ற உதவுகிறது. பொது நலனுக்காக செயற்கை நுண்ணறிவு திட்டத்தில் இந்தியா பணியாற்றி வருவதால், அதன் அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை உலகத்துடன் பகிர்ந்து கொள்கிறது. ●

# மொரீஷியஸில்

# ஒரு சிறிய இந்தியா வசிக்கிறது





**கடல்சார் அண்டை நாடான மொரீஷியஸுடன் இந்தியா வலுவான வரலாற்று, புவியியல் மற்றும் கலாச்சார தொடர்பைக் கொண்டுள்ளது. மொரீஷியஸ் ஒரு நெருங்கிய கடல்சார் அண்டை நாடு, இந்தியப் பெருங்கடலில் ஒரு முக்கிய நட்பு நாடு மற்றும் ஆப்பிரிக்க கண்டத்தின் நுழைவாயில் ஆகும். பிரதமர் நரேந்திர மோடியின் இரண்டு நாள் பயணம் மொரீஷியஸ் உடனான பொற்காலத்தின் அடித்தளத்தின் அடிப்படையில் இந்த உறவுகளுக்கு மற்றொரு மைல்கல்லாக அமைந்தது...**

இந்தியாவும் மொரீஷியஸும் வரலாற்றால் மட்டுமல்ல, எதிர்கால சாத்தியக்கூறுகளாலும் இணைக்கப்பட்டுள்ளன. மொரீஷியஸின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 70% இந்திய வம்சாவளியினர் என்ற உண்மையிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான பிணைப்பை புரிந்து கொள்ள முடியும். 1968ஆம் ஆண்டில் மொரீஷியஸ் சுதந்திரம் அடைந்தது. ஆனால் இந்தியா 1948இல் மொரீஷியஸுடன் தூதரக உறவுகளை ஏற்படுத்தியது என்பதிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையேயான வலுவான உறவுகளை அளவிட முடியும். மார்ச் 12 ஆம் தேதி மொரீஷியஸின் 57 வது தேசிய தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட கொண்டாட்டங்களில் பங்கேற்க சென்ற பிரதமர் நரேந்திர மோடி, இந்திய சமூகத்தினரிடையே உரையாற்றும் போது இந்த நல்லுறவை எடுத்துரைத்தார். 10 ஆண்டுகளுக்கு முன்பு இதே தேதியில் நான் மொரீஷியஸுக்கு வந்தபோது, அந்த ஆண்டு ஹோலி ஒரு வாரம் முன்னதாகவே கடந்துவிட்டது என்றும், பின்னர் இந்தியாவிலிருந்து பாக்வாவின் உற்சாகத்தை என்னுடன் கொண்டு வந்தேன் என்றும் அவர் கூறினார்.

## இந்தியா மற்றும் மொரீஷியஸ் இடையே வளர்ந்து வரும் வர்த்தக உறவுகள்

கடந்த 2005ஆம் ஆண்டு முதல், வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் மொரீஷியஸின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாண்மைகளில் ஒன்றாக இந்தியா இருந்து வருகிறது. 2023-24ஆம் ஆண்டில், இந்தியா மொரீஷியஸுக்கு 778.03 மில்லியன் டாலர் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்தது. அதே நேரத்தில், இறக்குமதி 73.10 மில்லியன் டாலர் மதிப்புடையது. இந்தியா முக்கியமாக பெட்ரோலிய பொருட்கள், மருந்துகள், தானியங்கள், பருத்தி மற்றும் இறால் ஆகியவற்றை மொரீஷியஸுக்கு ஏற்றுமதி செய்கிறது, அதே நேரத்தில் மொரீஷியஸின் வெனிலா, மருத்துவ உபகரணங்கள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தாமிரம் போன்ற பொருட்களை இறக்குமதி செய்கிறது. 2000ஆம் ஆண்டு முதல், மொரீஷியஸிடமிருந்து 175 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீட்டை இந்தியா பெற்றுள்ளது. இது இந்தியாவின் மூன்றாவது பெரிய முதலீட்டு நாடாக உள்ளது.



**இந்தியாவிற்கும் மொரீஷியஸிற்கும் இடையிலான வரலாற்று உறவுகளை மதித்து, மொரீஷியஸ் அரசு அதன் மிக உயர்ந்த சிவில் கௌரவமான கிராண்ட் கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி ஸ்டார் மற்றும் இந்தியப் பெருங்கடலின் சாவி 'ஜிசிஎஸ்கே' ஆகியவற்றை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கியது.**

தற்போது, இந்த முறை, ஹோலி பண்டிகையின் வண்ணங்களை என்னுடன் மொரீஷியஸில் இருந்து இந்தியாவுக்கு எடுத்துச் செல்ல உள்ளேன். புனிதச் சங்கமத்தின் நீரை என்னுடன் கொண்டு வந்துள்ளேன். இந்த புனித நீர் நாளை இங்குள்ள கங்கை குளத்திற்கு அர்ப்பணிக்கப்படும்.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மொரீஷியஸ் பிரதமர் நவீன்சந்திர ராம்கூலம் இடையேயான பிரதிநிதிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையிலும் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இரு நாடுகளும் 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. இரு தலைவர்களும் கூட்டறிக்கையும் வெளியிட்டனர். மொரீஷியஸும் இந்தியாவும் தங்கள் உறவுகளை ஒரு உத்தியிலான கூட்டாண்மைக்கு உயர்த்த முடிவு செய்துள்ளதாக பிரதமர் மோடி கூறினார். மொரீஷியஸின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தின் பாதுகாப்புக்கு இந்தியா முழு ஒத்துழைப்பு அளிக்கும். மொரீஷியஸில் போலீஸ் அகாடமி மற்றும் தேசிய கடல்சார் தகவல் பகிர்வு மையம் ஆகியவற்றை அமைப்பதிலும் கடலோரக் காவல்படையின் தேவைகளை பூர்த்தி செய்வதிலும் இந்திய அரசு ஒத்துழைக்கும். டிஜிட்டல் சுகாதாரம், ஆயுஷ் மையம், பள்ளிக் கல்வி, திறன்கள் மற்றும் இயக்கம் ஆகியவற்றில் ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும். மனித மேம்பாட்டில் செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை இணைந்து பயன்படுத்துவது குறித்து உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. மொரீஷியஸ் மக்களுக்காக இந்தியாவில் சார் தாம் (நான்கு திருத்தல யாத்திரை மற்றும் ராமாயண புனித சுற்றுலாவுக்கான வசதிகள் செய்து தரப்படும். மொரீஷியஸில் புதிய நாடாளுமன்ற கட்டடம் கட்டுவதற்கு இந்தியா ஒத்துழைக்கும் என்று பிரதமர் மோடி கூறினார். இது ஜனநாயகத்தின் தாயிடமிருந்து மொரீஷியஸுக்கு வழங்கப்படும் பரிசாக இருக்கும்.

தெற்கு உலகிற்கான புதிய கண்ணோட்டத்தை முன்வைத்த பிரதமர் மோடி, மொரீஷியஸ் இந்தியாவின் முக்கிய பங்குதாரர் என்று கூறினார். சாகர் (பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) என்ற கருத்தாக்கத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு மொரீஷியஸில் அடிக்கல் நாட்டப்பட்டது. 'உலகளாவிய தெற்கு' என்பது, பிராந்தியம் முழுவதும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பரஸ்பர மற்றும் முழுமையான முன்னேற்றமாக இருக்கும். அதாவது, அனைத்து பகுதிகளிலும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பரஸ்பர மற்றும் முழுமையான முன்னேற்றம். வளர்ச்சிக்கான வர்த்தகம், முன்னேற்றத்திற்கான திறன் மேம்பாடு, பகிரப்பட்ட எதிர்காலத்திற்கான பரஸ்பர பாதுகாப்பு ஆகியவற்றில் இந்தியாவின், அணுகுமுறை கவனம் செலுத்துகிறது. இந்தியப் பெருங்கடலில் தனது இருப்பை அதிகரிக்க இந்திய அரசு 2015இல் சாகர் திட்டத்தைத் தொடங்கியது என்பதை உங்களுக்குச் சொல்கிறோம்.

## பிரதமர் மோடியின் மொரீஷியஸ் பயணத்தின் முக்கிய மைல்கற்கள்...

- மொரீஷியஸில் குடியேறிய ஏழாவது தலைமுறை இந்தியர்களுக்கு (வெளிநாட்டு குடியுரிமை ) அட்டைகளை வழங்க இந்தியா முடிவு செய்தது.
- மொரீஷியஸ் பிரதமர் நவீன்சந்திர ராம்கூலாம், அவரது மனைவி வீணா ராம்கூலம், குடியரசுத் தலைவர் தரம்பீர் கோகூல் மற்றும் அவரது மனைவி பிருந்தா கோகூல் ஆகியோருக்கு பிரதமர் மோடி (வெளிநாட்டு குடியுரிமை) அட்டைகளை வழங்கினார்.
- மொரீஷியஸ் அரசு மாளிகையில் இந்திய அரசின் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்ட ஆயுர்வேத பூங்காவையும் பிரதமர் மோடி பார்வையிட்டார்.
- மொரீஷியஸில் 100 கி.மீ தூரத்துக்கு குடிநீர் குழாய்களை நவீனப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் மொரீஷியஸ் நாட்டைச் சேர்ந்த 500 அரசு ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படும்.
- உள்ளூர் நாணயத்தில் பரஸ்பர வர்த்தகத்தை மேற்கொள்ள இரு நாடுகளுக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டது.

## தெற்கு உலகுடன் இணைப்பதில் முக்கிய பங்கு

பிரதமர் நரேந்திர மோடி, மொரீஷியஸ் பிரதமர் நவீன்சந்திர ராம்கூலத்துடன் இணைந்து டிரியனான் மாநாட்டு மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு நிகழ்ச்சியில் மொரீஷியஸ் இந்திய சமூகத்தினரிடையே உரையாற்றினார். சிறப்பு ஏற்பாட்டின் கீழ், மொரீஷியஸில் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஏழாவது தலைமுறை மக்களுக்கு வெளிநாட்டு குடியுரிமை அடையாள அட்டை வழங்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்தார். மொரீஷியஸில் உள்ள இந்திய வம்சாவளியினர் தங்களது கலாச்சார வேர்களைப் பாதுகாத்து வளர்க்கும் வகையில் ஒப்பந்தப்படி பாரம்பரியத்தை வளர்க்கும் இந்த முன்முயற்சிக்கு இந்திய அரசு ஆதரவு அளிக்கும் என்று அவர் கூறினார். பருவநிலை மாற்றம் என்ற பொதுவான சவாலை சமாளிப்பதில் சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டணி மற்றும் உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியின் முன்முயற்சிகளில் மொரீஷியஸ் பங்கேற்பதை இந்தியா பாராட்டியுள்ளது. 'தாயின் பெயரில் ஒரு மரம்' முயற்சியின் கீழ், பிரதமர் மோடி வரலாற்று சிறப்புமிக்க சர் ஷிவ்சாகர் ராம்கூலம் தாவரவியல் பூங்காவில் மரக்கன்று ஒன்றை நட்டார்.

**மொரீஷியஸில் உள்ள ரெடியூட் நகரில் அடல் பிஹாரி வாஜ்பாய் பொது சேவை மற்றும் புத்தாக்க நிறுவனத்தை இரு நாட்டு பிரதமர்களும் தொடங்கி வைத்தனர்.**



# தூய்மைக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர்


பிறப்பு ஏப்ரல் 2 1943 | இறப்பு ஆகஸ்ட் 15 2023

**தனது சொந்த வீட்டில் கழிப்பறை இல்லாமல் வளர்ந்த பீகாரின் புனித பூமியில் பிறந்த ஒரு குழந்தை, தனது குடும்பத்தில் உள்ள பெண்கள் கட்டாயத்தின் காரணமாக வெளியே மலம் கழிக்கச் செல்ல வேண்டி இருந்ததைக் கண்டது. இந்த அனுபவம் இறுதியில் நாட்டின் கழிப்பறை புரட்சியின் முன்னோடியாக மாற அவரைத் தூண்டியது. அவரது பெயர் டாக்டர் பிந்தேஷ்வர் பாதக் பெண்களின் சுயமரியாதைக்காக சுலப் ஸ்வச்சதா வளாகம் என்ற அவரது யோசனையும் அந்த மக்கள் இயக்கத்திற்கு உத்வேகம் அளித்தது. 2014 ஆம் ஆண்டில், பிரதமர் நரேந்திர மோடி இந்த யோசனையை தூய்மை இந்தியா இயக்கமாக மாற்றி, தூய்மையை ஒரு பரவலான தேசிய நோக்கமாக மாற்றினார்.**

ஒரு பாரம்பரியமான பிராமண குடும்பத்தில் பிறந்த டாக்டர் பிந்தேஷ்வர் பாதக்கின் தூய்மை மீதான முக்கியத்துவம் 6 வயதில் தொடங்குகிறது. ஒருநாள், அவர் திடீரென்று சமூகத்தில் தீண்டத்தகாதவர் என்று முன்பு கருதப்பட்ட ஒரு பெண்ணைத் தொட்டார். அவரது பாட்டி அவரை திட்டினார். குடும்ப உறுப்பினர்கள் கோபமடைந்தனர். ஆனால் குழந்தையின் மனதில் பல கேள்விகள் எழுந்தன. வீட்டில் கழிப்பறை இல்லாததால், குடும்பத்தின் பெண்கள் இயற்கையின் அழைப்புகளுக்கு வெளியே செல்ல வேண்டியிருந்தது என்பதையும் அவர் உணர்ந்தார். இந்த சம்பவங்கள் அவர் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. மேலும் அவர் வளர்ந்த போது, தூய்மையை மேம்படுத்துவதை தனது வாழ்க்கையின் பணியாக மாற்றினார். கழிப்பறை போன்ற ஒரு விஷயத்தில் அவர் கவனம் செலுத்தத் தொடங்கிய போது, அவர் நிறைய சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

நிறைய போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. மக்கள் அவரைப் பரிகாசம் செய்தனர். ஆனால் சமூக சேவையில் அவரது அர்ப்பணிப்பு மிகவும் அதிகமாக இருந்ததால், அவர் தனது வாழ்க்கையை இந்தப் பணிக்காக அர்ப்பணித்தார். டாக்டர் பாதக் அந்தப் பாதையில் உறுதியாக இருந்தார். மகாத்மா காந்தியின் தூய்மை பற்றிய கருத்துக்களுக்கு ஒரு முழுமையான தீர்வை வழங்கினார். 1943 —ம் ஆண்டு ஏப்ரல் 2-ஆம் தேதி ஜனநாயகத்திற்கு பெயர் பெற்ற வைஷாலியில் பிறந்த டாக்டர் பிந்தேஷ்வர் பாதக், தூய்மை என்ற கருத்தை ஒரு நிறுவனத்தின் வடிவத்தை மிகவும் புதுமையான முறையில் வழங்கினார். கடந்த 1968-ம் ஆண்டு, அவர் வீட்டின் அருகில் உள்ள பொருட்களைக் கொண்டே குறைந்த செலவில் கழிவு உரம் அடிப்படையிலான கழிப்பறையை உருவாக்கினார்.. சுலப் சர்வதேச தொண்டு நிறுவனம் 1970-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1973-ம் ஆண்டில், டாக்டர் பாதக்கின் இயக்கத்தில் ஒரு பெரிய திருப்பு முனை ஏற்பட்டது, பீகாரின் ஆரா நகராட்சியின் அதிகாரி ஒருவர் அவருக்கு 500 ரூபாய் கொடுத்து, நகராட்சி வளாகத்தில் இரண்டு கழிப்பறைகள் கட்டும்படி கேட்டுக் கொண்டார். அங்கு, டாக்டர் பிந்தேஷ்வர் பாதக் உலர் கழிப்பறையை சுலப் கழிப்பறையாக மாற்றினார். அதற்காக அவர் மிகவும் பாராட்டப்பட்டார். பின்னர் படிப்படியாக, அவரது இயக்கம் வேகமாக முன்னேறியது. பீகாரில் ஒன்றன்பின் ஒன்றாக பல கழிப்பறைகளை அவர் கட்டினார்.

சுலப் சன்ஸ்தா நிறுவனம் நாட்டில் 10,123-க்கும் மேற்பட்ட பொது கழிப்பறைகள், சுமார் 16 லட்சம் வீடுகளில் கழிப்பறைகள், 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் கழிப்பறைகள், சுமார் 2,500 மிகவும் பின்தங்கிய பகுதிகளில் கழிப்பறைகள், 200க்கும் மேற்பட்ட உயிரி எரிவாயு ஆலைகள் மற்றும் 12க்கும் மேற்பட்ட மாதிரி கிராமங்களை உருவாக்கியுள்ளது. இது மட்டுமல்லாமல், டாக்டர் பிந்தேஷ்வர் பாதக், 10,000 க்கும் மேற்பட்ட மக்களை கையால் துப்புரவு செய்யும் தீய நடைமுறையிலிருந்து வெளியே கொண்டுவந்த பெருமைக்குரியவர். பிருந்தாவனம், காசி, உத்தராகண்ட் மற்றும் பிற பகுதிகளில் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது தொடர்பான பல பணிகளையும் அவர் செய்தார். குறிப்பாக யாரும் இல்லாத ஆதரவற்ற பெண்களுக்கு உதவுவதற்காக அவர் பெரிய இயக்கங்களை நடத்தினார். டாக்டர் பிந்தேஷ்வர் பாதக் 2023 ஆகஸ்ட் 15 அன்று காலமானார். அவரது மறைவை நினைவுகூர்ந்த பிரதமர் நரேந்திர மோடி, "அவர் ஒரு தொலைநோக்கு பார்வை கொண்டவர். அவர் சமூக முன்னேற்றத்திற்காகவும், எளியவர்களுக்கு உதவுவதற்காகவும் முழுமூச்சுடன் பணியாற்றினார். நான் அவரோடு பேசும் போதுதெல்லாம் தூய்மை மீதான அவரது ஆர்வம் எப்போதும் தெளிவாகத் தெரியும்". டாக்டர் பாதக்கிற்கு 'பத்ம விபூஷண்' (மரணத்திற்குப் பின்) விருது வழங்கப்பட்டது. சமூக சேவையில் அவரது சிறந்த பங்களிப்பிற்காக இந்த உயரிய விருது வழங்கப்பட்டது.



X



PMO India @PMOIndia

हम सभी को अपने खाने के तेल में 10% की कटौती करनी चाहिए।

हमें हर महीने 10% कम तेल में काम चलाने का प्रयास करना है।

मोटापा कम करने की दिशा में ये एक बहुत बड़ा कदम होगा: PM @narendramodi



रक्षा मंत्री कार्यालय/ RMO India @DefenceMinIndia

आज जिस तरह से हमारी Air force की ताकत बढ़ रही है, उसमें हमारे जाँबाज और बहादुर Air warriors का तो योगदान है ही, लेकिन मैं समझता हूँ आपके द्वारा निर्मित equipment भी उतने ही महत्वपूर्ण हैं। आपके equipment ही हमारे Air warriors को वह ताकत प्रदान करते हैं, जिससे वो हमारी सीमाओं की सुरक्षा मजबूती के साथ कर पाते हैं: रक्षा मंत्री श्री @rajnathsingh



Amit Shah @AmitShah

बाबा केदारनाथ व हेमकुंड साहिब के तीर्थयात्रियों को आज मोदी जी ने बड़ी सौगात दी।

केन्द्रीय कैबिनेट ने उत्तराखंड में 'सोनप्रयाग से केदारनाथ' और 'गोविंदघाट से हेमकुंड साहिब' तक, दो रोपवे परियोजनाओं को मंजूरी दी है। इससे यहाँ आने वाले श्रद्धालुओं का समय बचेगा और यात्रा अधिक सुगम होगी। साथ ही, इन तीर्थ क्षेत्रों के दर्शन की समयावधि के विस्तार के साथ-साथ पर्यटन व रोजगार को भी बढ़ावा मिलेगा।



Nitin Gadkari @nitin_gadkari

गरीबों के अच्छे स्वास्थ्य के लिए, उन्हें कम लागत में दवा उपलब्ध कराने के उद्देश्य से प्रधानमंत्री श्री @narendramodi जी द्वारा कार्यान्वित 'प्रधानमंत्री भारतीय जन औषधि परियोजना' के अंतर्गत देश के गरिबो को दवाएं औसत बाजार मूल्य की तुलना में 50 से 90 प्रतिशत तक सस्ती मिलती है। सस्ती दवा के साथ साथ जन औषधि परियोजना रोजगार भी उपलब्ध करा रही है।



Dharmendra Pradhan @dpradhanbjp

Women-led development and women's empowerment has been at the heart of PM @narendramodi ji's governance model.

In the last ten years, Govt. of India has adopted a multi-sectoral approach to empower and uplift women, boost their participation in decision-making process, give them their fair share and make them equal partners in national progress. #WomensDay



Gajendra Singh Shekhawat @gssjodhpur

पीएम सूर्य योजना से जुड़े 10 लाख घर,
बिजली के क्षेत्र में भारत बन रहा आत्मनिर्भर।

प्रधानमंत्री श्री @narendramodi जी के मार्गदर्शन में भारत का ऊर्जा जगत नित नई ऊंचाइयों को छू रहा है।

#10LakhsForPMSuryaGhar



# PM: Mauritius is family, links India to wider Global South

Island Nation To Confer On PM Top Award

# PM urges cut in oil intake: '44 cr Indians may be suffering from obesity by 2050'

# New criminal law ensuring faster justice to females: PM

CENTRAL RAILWAY RUNS ALL-WOMAN VANDE BHARAT

# Govt has set target to make 3 cr 'Lakhpati Didis' in 5 years: Modi

Lakhpati Didis greet PM Narendra Modi on the occasion of International Women's Day in Navsari on Saturday.

# PM welcomes India's 58th tiger reserve in MP

# WOMEN'S SAFETY TOP PRIORITY: MODI

# Modi first Indian to get Mauritius' highest honour

PRIME MINISTER NARENDRA Modi will be the first Indian to receive Mauritiu highest honour, The Grand Commander of the Order o the Star and Key of the Indi Ocean, reports PTI. ■ PAGE 3

# PM heads to Mauritius, pacts on maritime security, tackling financial crimes on table

**பாபாசாகேபின் 135-வது பிறந்த நாள்**

# தொலைநோக்கு பார்வை கொண்ட பாபாசாகேபுக்கு மரியாதை

**பிறப்பு- 14 ஏப்ரல் 1891, இறப்பு- 6 டிசம்பர் 1956**

சமத்துவம், சமநிலை மற்றும் நீதி என்ற உணர்வு பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் சமூக கட்டமைப்பின் கருத்தாக்கத்தில் இருந்து வருகிறது. இதற்காக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, பகவான் புத்தர் இரக்கத்தின் பாதையைக் காட்டினார், அதே நேரத்தில் நவீன இந்தியாவில், பாபா சாஹேப் டாக்டர் பீமாராவ் அம்பேத்கர் சமூக மற்றும் பொருளாதார நீதிக்கு வழி வகுத்தார். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், மத்திய அரசு இன்று ‘அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம், அனைவரின் நம்பிக்கையைப் பெறுவோம், அனைவரும் முயற்சிப்போம்’ என்ற தீர்மானத்துடன் முன்னேறி வருகிறது. தில்லியில் உள்ள அலிபூர், மத்தியப்பிரதேசத்தில் உள்ள மோவ், மும்பையில் உள்ள இந்து ஆலை, நாக்பூரில் உள்ள தீக்ஷா பூமி மற்றும் லண்டனில் உள்ள அவரது வீட்டை ‘பஞ்சதீர்த்’ என்று மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இதனால் இளைய தலைமுறையினர் தேசத்தைக் கட்டியெழுப்ப பாபா சாஹேப்பின் பங்களிப்புகளிலிருந்து உத்வேகம் பெறுவார்கள்.



**“டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கரின் பிறந்தநாளில் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறேன். இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அவர் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்கியுள்ளார். நமது தேசத்திற்கான அவரது கனவுகளை நிறைவேற்றுவதற்கான நமது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தும் நாள் இன்று”**

**- நரேந்திர மோடி, பிரதமர்**


**NEW INDIA SAMACHAR FORTNIGHTLY**

RNI No. : DELTAM/2020/78809 APRIL 1-15, 2025

RNI Registered No DELTAM/2020/78809, Delhi Postal License No DL(S)-1/3551/2023-25, WPP NO U(S)-99/2023-25, posting at BPC, Market Road, New Delhi-110001 on 26-30 advance Fortnightly (Publishing Date March 17, 2025, Pages -44)

**Editor in Chief**
Dhirendra Ojha
Principal Director General,
Press Information Bureau, New Delhi

**Published & Printed by:**
**Yogesh Kumar Baweja**,
Director General, on behalf of
**Central Bureau Of Communication**

**Published from:**
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003

**Printed at**
**Kaveri Print Process Pvt. Ltd.**
**A-104 Sector-65,**
**Noida-201301 U.P.**

Tamil
Vol. 5 Issue 19